ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ.	3—0
6-மாத சந்தா	,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு	,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ புரட்டாசி௴ 18௳ (4—10—1931) | மலர் 23

கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித ரூனி சரகுகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் . தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லற இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பதியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், கிறுகிறுப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம் இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

இன்சூரன்ஸ்.

கேள்வி;—நான் ஏன் லைப் இன்சூரன்ஸ் பாலிசி வாங்கவேண்டும்?

பதில்:—ஏனெனில், உம்முடைய ஜீவியகாலத்தில் உம்முடைய வருமானத்திலிருந்து மிகவும்ஸ்வல்ப பாகமே உம்மால் பிரிமியமாகக்கட்டப்படுகிறது. அதற்குப்பதிலாகவோ, நீர் இறந்தவுடனே உம்மை ஆதாரமாக ஆசரித்திருப்பவர்களுக்கு இவ்விதமாகச் செலுத்தப்பட்ட சிறிய தொகையானது அவர்கள் சம்ரக்ஷணைக்கு ஒரு பெரிய நிதியை ஏற்படுத்துகின்றது.

கேள்வி:—பணம் மீத்துவைப்பதற்கு ஏற்பட்டிருக்கும் எல்லாவழிகளையும்விட மிகவும் சிறந்ததாக ஏன் ஓர் லைப் அஷ்யூரன்ஸ் பாலிஸியையே கொள்ளவேண்டும்?

பதில்;—ஏனெனில் பாலிஸி எடுத்துக்கொண்ட நிமிஷம் முதற்கொண்டே எவ்வளவு சிறியதொகை உம்மால் பிரிமியமாகக் கட்டப்பட்டிருந்தபோதிலும், அஷ்யூர் பண்ணப்பட்ட முழுத்தொகையும் உம்மை ஆலரித்திருப்பவர்களுக்கு நீர் இறந்த நிமிஷமே கொடுக்கப்படும்.

கேள்வி:—பணம் மீத்துவைப்பதற்கு ஏற்பட்டிருக்கும் மற்ற வழிகள் ஏன் பிரயோஜனமற்றவைகளாயிருக்கின்றன?

பதில்,—ஏனெனில் மற்றவழிகளிலோ, உம்மால் சேர்த்து வைக்கப்பட்ட தொகை எவ்வளவோ அவ்வளவே உம்மை ஆலரித்திருப்பவர்களுக்கு உம்முடைய மரணகாலத்திற்குப்பிறகு கிடைக்கும். ஒருக்கால் அந்தத் தொகையால் ஷேர்கள் வாங்கப்பட்டிருந்தாலோ, கால நிலைமையை ஒத்து அவைகளின் விலை மதிப்பு இறங்குமானால், இவ்விதமாக மீத்து வைக்கப்பட்டிருக்கும் தொகையானது உம்மால் முதலில் ஏற்படுத்தப்பட்டதைவிடக் குறைந்து விட்டாலும் விடலாம்.

ஆனாலோ:

ஓர் லைப் பாலிஸியில் அஷ்யூர் பண்ணப்பட்ட தொகையானது, மிகவும் நம்பிக்கையான உத்தரவாதம் பெற்ற கம்பெனியில் அதற்கு கால நிலைமையையொத்து யாதொரு குறைவும் ஏற்படவழியில்லை.

கேள்வி:—நான் நல்ல தேக சௌக்கியமுள்ளவனாகவும் திடகாத்திரமுள்ளவனாகவும் இருக்கும்போது எனக்கு அகால மரணம் ஏற்படுமென்று ஏன் நினைக்கவேண்டும்?

பதில்,—ஏனெனில் அனுபோகத்தினால் கவனிப்போமானால் நல்ல தேகசௌக்கியத்திலிருக்கும் 30-வயதுள்ள திடசாலிகள் 1,000 பேர்களில் 99 பேர் 10 வருஷத்துக்குள்ளும், 238 பேர் 20 வருஷத்துக்குள்ளும், 452 பேருக்குக் குறையாமல் 60 வருஷத்துக்குள்ளும், இறந்து போகிறார்கள் என்பதை நாம காண்கிறோம்.

மேலும் 20 வயதுள்ள திடகாத்திரர்களான 1000 பேர்களில் 522 பேருக்குக் குறையாமல் அதாவது பாதிக்கு மேலாகவே, 60 வயதுக்குள் இறந்து விடுகிறார்கள்.

இவர்களில் நீர் ஒருவராய் இருந்தாலும் இருக்கலாம்.

ஆகையால், உமக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் கூடியிருக்கும் போதே உம்மை ஆலரித்திருப்பவர்களின் சம்ரக்ஷணைக்கு ஒரு நிச்சயமான வழியை ஏற்படுத்த வேண்டுவது உம்முடைய மிகவும் முக்கியமான கடமையாகும்

"காற்றுள்ளபோதே தூற்றிக் கோள்"

இன்றைய தினமே ஒரு பாலிஸி எடுப்பதற்கு நீர் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு சமயம் நாளைய தினம் ஆகட்டுமென்று நீர் அவிழ்தையாயிருப்பீரானால் ஒரு சமயம் உனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் சௌகரியங்கள் குறைந்து, உம்முடைய நல்ல எண்ணமானது நிறைவேறாமல் போய் விட்டாலும் விடலாம். இன்றைய தினமே உம்மையே கெதியாக நம்பியிருப்பவர்களின் சம்ரக்ஷணையின் பொருட்டு, நீர் ஓர் அஷ்யூரென்ஸ் லைப் பாலிஸி எடுக்க ஏற்பாடு செய்யத் தவறாதீர்கள்.

இந்தியாவில் 54 ஆண்டுகள் லைப் அஷ்யூரென்ஸ் அனுபோகமுள்ள, முற்றிலும் இந்தியர்களே காரியதுரந்தரர்களாக இருந்து செவ்வனே நடத்தி வைக்கப்பட்டு வரும் எல்லா லைப் அஷ்யூரென்ஸ் கம்பெனிகளைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு பெரியதானதாகவும் பலமானதாகவும் பூரண நம்பிக்கை வைக்கத் தக்கதாகவும் இருந்து வரும் "ஓரியண்டல்" லைப் அஷ்யூரென்ஸ் கம்பெனியில் ஓர் பாலிஸி எடுத்துக் கொள்வதைப் போல அவ்வளவு சிறந்த வழி வேறு ஒரு விதத்திலும் ஏற்படாது என்பதை நன்றாய் கவனிப்பீர்களாக.

வார்ஸ்தாரர்களுககு இது வரையில் கொடுக்கப் பட்ட மிகவும் பெரிய தொகை சுமார் ரூ. 10,50,00,000 (பத்தரை கோடி).

இனிமேல் வரும் வார்ஸ்தாரர்களுக்குக் கொடுப்பதற்காகக் கையில் இருப்பு ரூபா 8,36,00,000 எட்டு கோடியே முப்பத்தாறு லக்ஷத்திற்கு மேலிருக்கிறது.

வருஷாந்திர வருமானம் ரூபா. 1,62,27,000 ஒரு கோடியே அறுபத்திரண்டு லக்ஷத்தி இருபத்தியேழாயிரத்திற்கு மேலாகவே வருகிறது.

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

6½ x 4¾ காப்பி1-க்கு 0—8—0
டஜன 1-க்கு 6—0-0
8½ x 6½ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு ,, 1—8—0
உள். ஷை டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ. 15—0—0
6½ x 4¾ காப்பி 1-க்கு
வெளிநாட்டுக்கு தபால்
செலவுடன் ரூ. 0—12—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 11 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 12 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேணடும்.

பாவு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்
200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்சின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்சின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலைன் மோட்டார்களிலும். 30 வருஷ அனுபவமுள்ள ரா. கன்னியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-
குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சமதர்ம அறிக்கை.

முகவுரை.

தற்காலம் உலகில் ரஷியாவிலும், ஸ்பெயினிலும், மற்றும் சைனா முதலிய இடங்களிலும் சமதர்மம், பொதுவுடைமைதர்மம் ஆகியவைகளின் பேரால் அரசாட்சிகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த ஒரு உண்மையாகும்.

இவ்வுணர்ச்சியானது ரஷியாவில் தான் முதல் முதல் தோன்றியதாக நமது மக்களில் அநேகர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள். சமதர்மஉணர்ச்சிசம்பந்தமான சரித்திரத்தைக்கவனித்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இக்கருத்து சரியானதல்ல என்பதாகத் தோன்றும். ஏனெனில், உலகில் சமதர்ம உணர்ச்சி என்பதானது பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியிருப்பதற்கு அத்தாட்சிகளிருக்கின்றன.

சமதர்ம உணர்ச்சி ஒரு எண்ணமாய் ஏற்பட்டு அதன் தத்துவங்களைப்பற்றியும், கொள்கைகளைப்பற்றியும் வெளியில் எடுத்து மக்களுக்குத் தெரியும்படியாக மகாநாடுகள் மூலமும் அறிக்கை மூலமும் வெளிப்பட்டிருப்பதாக நமக்கு விளங்கும்படியாய் காணப்படும் காலமே இற்றைக்கு சுமார் 80, 90 வருஷங்களுக்குமுன்பு என்று தெரிகின்றது. அதாவது 1847ம் வருஷத்திலேயே லண்டன்மாநகரத்தில் உலகத்திலுள்ள சமதர்ம வாதிகளுடைய மகாநாடு (காங்கிரஸ்) ஒன்று நடந்திருப்பதாகவும், அதன் பயனாய் அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆனால் அதை சீக்கிரத்தில் கையாளப்படவும் அனுபவத்திற் கொண்டுவரவும் முயற்சித்த நாடு ரஷியாவாக ஏற்பட்டு விட்டது.

இது சம்பந்தமாக நமக்குக் கிடைத்த ஒரு அறிக்கை சரித்திரத்தில் சமதர்ம உணர்ச்சி பெற்றவர்களில் முதன்மையான முக்கியஸ்தர்கள் ஜெர்மனியர்களாயிருந்தாலும், அதற்காக மகாநாடு கூடினது லண்டன் பட்டணமாய் இருந்தாலும், அதற்கு அப்பொழுதே கிளர்ச்சி நடந்தது பிரான்சுதேசமாயிருந்தாலும், அது முதல் முதல் அனுபவத்தில் கொண்டுவர முயற்சிக்கவேண்டிய இடம் ரஷியாவாகவே ஏற்பட்டுவிட்டது சிலருக்கு ஆச்சரியத்தைக்கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் அந்தப்படி ஏற்படுவதற்கு நியாயம் இல்லாமலில்லை.

என்ன நியாயமென்று வாசகர்கள் கேட்பார்களேயானால் அதற்கு நமது சமாதானமானது எங்கு அளவுக்கு மீறிய—தாங்க முடியாத கொடுமை நடைபெறுகின்றதோ அங்குதான் சீக்கிரத்தில் பரிகார முயற்சி வீறு கொண்டு எழவும் சீக்கிரத்தில் இரண்டிலொன்று காணவுமான காரியங்கள் நடைபெறும்.

எனவே இந்த நியாயப்படி பார்ப்போமானால் உலக அரசாங்கங்களிலெல்லாம் ரஷிய ஜார் அரசாங்கமே மிக்க கொடுங்கோன்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. தனாலேயே அங்கு சமதர்மமுறை அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டியதாயிற்று.

இந்த நியாயப்படி பார்த்தால் அவ்வித சமதர்மஉணர்ச்சி உலகில் ரஷியா தேசத்தைவிட இந்தியாவுக்கே முதன் முதலாக ஏற்பட்டு இருக்கவேண்டியதாகும். ஆனால் அந்தப்படி ஏற்படாமல் இருப்பதற்கு இங்கு அனேகவித சூட்சிகள் நடைபெற்று வந்திருப்பதாலும், சூட்சிக்காரர்கள் இந்திய மக்களை வெகு ஜாக்கிரதையாகவே கல்வி, அறிவு, உலக ஞானம், சுயமரியாதையுணர்ச்சி முதலியவைகள் பெறுவதற்கு மார்க்கம் இல்லாமல் காட்டுமிராண்டித்தன்மையில் வைத்து வந்ததோடு, கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் ஏற்படுத்தப்பட்ட உணர்ச்சியானது அடிமையாக இருப்பதே கடவுள் சித்தமென்றும், மோக்ஷ சாதனமென்றும்புகட்டிவந்ததாலும், அதே சூட்சிக்காரர்கள் அடிக்கடி வேற்றரசர்களை அழைத்து வந்து மக்களை மிருகத்தனமான ஆதிக்கத்தால் அடக்கி ஆளச்செய்து வந்ததாலும் உலகில் சமதர்ம உணர்ச்சி முதன் முதல் இந்தியாவிலேயே ஏற்பட்டிருக்க வேண்டியது மாறி ரஷியாவுக்குமுதல்ஸ்தானம் ஏற்படவேண்டியதாயிற்று.

ஆனபோதிலுங்கூட இப்போது உலகில் மற்றும் எல்லாப்பாகங்களிலும் ஏற்பட்டு விட்டதின் காரணமாய் இந்தியாவிலும் ஏற்படவேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாய்ப்போய்விட்டதால் இங்கும் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. ஆனால் உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருந்து வருகின்றது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயம் தான் முக்கியமாய் கருதப்படுகின்றது. அதாவது முதலாளி (பணக்காரன்) வேலையாள் (ஏழை) என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல் ஜாதியார்—கீழ் ஜாதியார், என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் அது பணக்காரன், ஏழை தத்துவத்திற்கு ஒருகோட்டையாக இருந்து காப்பாற்றிக்கொண்டுவருகின்றது.

ஆதலால் இங்கு சமதர்மத்திற்கு இரட்டிப்பு அதிகமான எதிர்ப்பு இருந்து வருவது கொண்டு சமதர்ம உணர்ச்சி தலை தூக்க முடியவில்லை.

இவ்விபாகங்கள் இந்த அளவில் நிற்க, முன் குறிப்பிட்டதான அதாவது சமதர்மக்கொள்கை சம்பந்தமாக அந்தக்காலத்தில் வெளியான ஒரு அறிக்கையை மக்கள் உணரும்படியாக வெளிப்படுத்தலாம என்று நாம் கருதுவதால் அதை மொழிபெயர்த்து வெளியிடலாம் என்கின்ற கருத்துக்கு மேல்கண்டே வாக்கியங்களை முகவுரையாக எழுதினோம். இனி மேல்வருபவைகள் முழுவதும் அவ்வறிக்கையின் மொழிபெயர்ப்பேயாகும். அதில் நமதபிப்பிராயம் என்பது சிறிதும் இல்லை. ஆகையால் வாசகர்கள் அதை 1847-ஆல் இரண்டு ஜர்மனியர்களுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் என்பதாகவே கருதி வாசிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

ஈ. வெ. ரா.

'சமதர்ம அறிக்கையின் சரித்திரமும் பீடிகையும்:-

1847ம் வருஷத்தில் லண்டனில் ஒரு சமதர்மகாங்கிரசு நடந்தது. அதற்கு உலகின் பலபாகங்களில் இருந்தும், சமதர்மஉணர்ச்சியுடையபிரதிநிதிகள் பலர்வந்தார்கள். அக்காங்கிரசில் சமதர்ம இயக்கத்தின் சார்பாக அதன் கொள்கைகளை வெளியிட காரல் மார்க்ஸ், பிரடரிக் எஞ்சல்ஸ் ஆகிய இரண்டு ஜர்மனியப்பிரதிநிதிகளை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் செய்து அத்தீர்மானப்படி அவ்விருவரும் ஜர்மனி பாஷையில் ஒரு அறிக்கை தயாரித்து 1848ம் வருஷம் ஜனவரி மாதத்தில் அச்சுக்கு கொடுத்தார்கள். ஆனால் அது அச்சிடப்பட்டு வெளியாவதற்கு முன்பே அடுத்த பிப்ரவரிமாதத்தில் பிரான்சு தேசத்தில் ஒரு சமதர்ம புரட்சி ஏற்பட்டுவிட்டது. அப்புரட்சியின் மத்தியகாலமாகிய ஜூன் மாதத்தில் அவ்வறிக்கையை பிரெஞ்சுபாஷையில் மொழிபெயர்த்து பரப்பப்பட்டது. அதுசமயம் வேலை செய்து ஜீவனம் செய்யும் ஏழைமக்கள் ஏராளமாய் அப்புரட்சியில் கலந்து இருந்தார்கள். என்றாலும் புரட்சியின் பயனாய் ஏற்பட்ட மாறுதல்களால் அவ்வேழை மக்களுக்கு யாதொரு பயனும் ஏற்படவில்லை. ஏழை மக்கள் சுதந்திரமாய், க்ஷேமமாய் வாழ ஆசைப்பட்டு அதற்காக என்று என்ன என்ன முயற்சிகள் செய்யப்பட்டனவோ அவைகளையெல்லாம் அங்குள்ள பணக்காரர்கள் எதிர்த்து நின்று தோற்கடித்து தலையெடுக்கவொட்டாமல் செய்துவிட்டார்கள்.

அதோடு கூடவே அப்போதைய ஜர்மன் அரசாங்கத்தாரும் அம்முயற்சிகளையெல்லாம் அடக்கப்புறப்பட்டு கலோன் பட்டணத்தில் இருந்த சமதர்ம சங்கத்தின் மத்திய நிர்வாக சபை அங்கத்தினர்களை கைதி செய்து 18 மாதங்கள் விசாரணை செய்யாமலே ரிமாண்டு கைதிகளாக சிறையில்வைத்திருந்தார்கள். கடைசியாக 1852ம் வருஷத்தில் அவர்கள் விசாரிக்கப்பட்டு ஏழு பெயர்கள் மூன்று முதல் ஆறு வருஷம்வரை தண்டிக்கப்பட்டார்கள். அதன்பயனாய் சமதர்ம சங்கமே கலைக்கப்பட்டுவிட்டது. சமதர்ம அறிக்கை விநியோகமும் நிறுத்தப்பட்டு விட்டது. மறுபடியும் கொஞ்சகாலம் பொறுத்து வேலை செய்து ஜீவனம் செய்யும்பாமரஜனங்களுக்குச்சிறிதுசிறிதாக தைரியம் ஏற்பட்டு சர்வதேச வேலையாளர்கள் சங்கம் என்பதாக ஒன்றை ஸ்தாபித்தார்கள். அதன் மூலமாக மற்றும் பலதேசங்களில் இருந்து வந்ததான சமதர்ம அபிப்பிராயம் கொண்டவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், தங்கள் அபிப்பிராயங்களை கலந்துகொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படலாயிற்று சமதர்மக்கொள்கை முழுவதையும் ஏற்றுக்கொள்வதில் ஆரம்பத்தில்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

நாகை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு

திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் தலைவர்.
திரு. M. K குப்புசாமி வரவேற்புத் தலைவர்.

திறப்புவிழா வாற்றிய காரைக்குடி

திருமதி சுப. விசாலாட்சியம்மாள்

அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கு.

3—10—31.

என் அருமை அண்ணன்மாரே! அக்காமாரே!!

நாகபட்டணம் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் துவக்க விழாவாற்றும் பெருமையை சுயமரியாதை இயக்கப் பால்மணம் மாறாத சிறு குழந்தையாகிய எனக்கு அளித்ததானது நான் சுமக்க முடியாத ஒரு சுமையை என் தலையில் சுமத்தியதாகவே கருதுகின்றேன். இச்சுமையை ஏற்க கட்டளைவந்த உடனே சற்று தயங்கினேன். எனினும், என்னைப்பற்றி, என்னைவிட நன்றாய் உணர்ந்தவர்களும், என்னிடமிருந்து எவ்வித பணி பெறுவது என்பதில் உரிமையுள்ளவர்களுமான பெரியோர்களின் கட்டளையை மறுப்பது ஒழுங்காகாதெனக் கருதி சிரமேற்கொண்டு இங்குதோன்றி இருக்கிறேன்.

இவ்வரும் பெரும் மகாநாட்டைத் துவக்குமுறையில் நான் ஏதோ சில வார்த்தைகளாவது சொல்லவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களை ஏமாற்றமடையச் செய்ய மனமில்லாத நான் ஏதோ இரண்டொரு வார்த்தைகளையாவது, சொல்லித்தீர வேண்டிய நிலைமையில் இருக்கின்றேன்.

நமது இயக்கம் "புரட்சி இயக்கம்"

பெரியோர்களே! நமது சுயமரியாதை இயக்கம் அநேகர்களின் கண்களுக்கு புரட்சி இயக்கமாகக் காணப்படுகின்றது என்பதை நான் அறியாமல் இல்லை. அந்தப்படி அது காணப்படுவதில் ஆச்சரியம் இருப்பதாக நான் கருதவுமில்லை. ஏனெனில் அளவு கண்டுபிடிக்கமுடியாத காலமுதற்கொண்டே மூர்க்கத்தனத்தாலும், சூழ்ச்சியாலும், அரசாங்கம், நீதி, பழக்கம், வழக்கம், அனுபோகம், ஆதிக்கம், ஒழுக்கம், மதம், சாஸ்திரம், "தெய்வீகம், கடவுள்" என்பன வாதியவற்றின் சக்திகளாலும், சாக்காலும் அடிமைப்படுத்தப் பட்டுக்கிடக்கும் ஒருநாடோ, ஒரு பாலோ, ஒரு சமூகமோ, ஒரு வகுப்போ, அவ்வடிமைத்தன்மையிலிருந்து தன்னைவிடுவித்துக்கொள்ள வேண்டுமானால் மேல் சொல்லப்பட்ட அத்தனை சக்திகளுக்கும் விரோதமான ஒரு முயற்சியைக் கைக்கொண்டாலல்லாமல் மற்றபடி வேறு எந்த சாதனத்தாலாவது விடுதலை அடையச் செய்ய முடியுமாவென்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே, அடிமைத்தன்மைக்கு ஆக்கமளித்து, ஆதரவளிக்கும் மேற்கண்டதான அரசாங்கம் முதல் கடவுள் ஈறாகவுள்ள அவ்வளவு சக்திகளையும் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும்படியான ஒரு காரியத்தை-ஒரு இயக்கத்தை அதற்கெதிரான மக்கள் "புரட்சி" என்றும், "புரட்சிஇயக்க"மென்றும் சொல்லாமல் வேறு எதற்குத்தான் அந்தப் பெயரை சூட்ட முற்படுவார்கள் என்பதை யோசித்துப்பாருங்கள்.

மேலும், அந்தப் "புரட்சி" என்னும் காரியமும், வார்த்தையும் மேன்மை அடைய வேண்டுமானால் அது மேல்கண்டதான அடிமைத்தன்மையை விடுவிக்கும் காரியத்திற்குப்பெயராக அடைந்தால்தான் அதற்கு (அப்புரட்சி என்னும் வார்த்தைக்கு) வெற்றியும் பெருமையுமுண்டாகும். அப்படிக்கில்லாமல் அதாவது அது உண்மையாளர்களும், சுயமரியாதைக்காரர்களும், வீரர்களுமல்லாத சூட்சிக்காரர்களிடமும், வயிற்றுப்பிழைப்புக்காரர்களிடமும் அடிமைப்படுத்துவதிலும் ஆதிக்கம் செலுத்துவதிலும் ஆசைகொண்ட மூர்க்கர்களிடமும் அணுகி அவர்களால் செய்யப்படும் காரியங்களுக்குப் பெயராக அமையுமானால் அப்புரட்சி என்னும் வார்த்தைக்கே இழிவு ஏற்பட்டுவிடாதா? ஆகையால் புரட்சி என்னும் வார்த்தைக்கு மரியாதை ஏற்படவேண்டுமானால் அது நம்மைவந்து தஞ்சமடையட்டும்.

அன்றியும் நமது இயக்கத்திற்கு "புரட்சி இயக்கம்" என்று மற்றவர்கள் சொல்லுகின்றார்களே என்று நாம் சிறிதும் கவலைப்பட வேண்டியதுமில்லை. நிற்க,

நாட்டுநிலை.

நண்பர்களே! நமது நாடு தருமநாடு என்றும், ஞானபூமி என்றும், சோம்பேரிகளாலும், சூட்சிக்காரர்களாலும், சொல்லப்பட்டு நாம் ஏமாற்றப்படுகின்றோம். ஏனெனில் பாடுபடாத சோம்பேரிகளுக்கு இடுவதையே தருமமென்றும், தட்டிப்பேசாமல் எதையும் நம்புவதையே ஞானமென்றும் சொல்லப்பட்டு இருப்பதால் பாடுபடாமல் வயிறுவளர்க்கும் கூட்டம் இந்நாட்டை தருமநாடு என்றும், ஏமாற்றி வாழும் கூட்டம் ஞானபூமி என்றுந்தான் சொல்லும். அப்படியில்லாமல் நடுநிலைமையில், யோக்கியமாய் இருந்து பார்ப்பவன்தான் இந்த நாடு பாடுபடுவோர்களை ஏமாற்றும் அதர்ம நாடு என்பதையும், கண்மூடித்தனமாய் சோம்பேரிகள் வார்த்தையை நம்பி நடக்கும் அஞ்ஞான நாடு என்பதையும் கண்டுபிடிப்பான்.

"அபலை"

மேலும், ஆண்பால், பெண்பால் என்கின்ற இரு பாலரில் ஆண் பாலின் மூர்க்கத்தனத்தால் அடக்கி, ஆண்டு அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் பெண்பாலை 'அபலை' என்றும், 'கற்புக்கரசி' என்றும் சொல்லப்படுகின்றது. இது பெண்களின்மேல் ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்று, பெண்களை அடிமைகளாய் வைத்து நடத்தவேண்டும் என்றும் கருதியதான சுயநல, வஞ்சக எண்ணத்தின் மீதே கற்பிக்கப்பட்டதாகும். ஆனால் பெண்கள் தங்களை அபலைகள் என்று கருதிக்கொண்டிருப்பதும், "கற்புக்கரசியாய்" இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருப்பதும், ஒரு பாலுக்கு ஒரு பால் அதாவது ஆண்பாலுக்குப் பெண்பால் அடிமையாயிருக்க வேண்டியது அவசியம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மூட அடிமைப் பெண்களின் தன்மையேயாகும். ஆனால் அறிவுள்ள வீரப் பெண்மணியாயிருப்பவள் இந்த அபலைத்தனத்தையும், கற்புக் கரசித் தன்மையையும் கவனித்துப்பார்ப்பாளேயானால் பேடித்தனத்திற்கும், ஏமாற்றப் பட்டிருப்பதற்குந்தான் இந்த வார்த்தைகள் மூர்க்கர்களாலும், வஞ்சகர்களாலும் கற்பிக்கப்பட்டவைகளாகும் என்பதைநன்றாய் உணருவாள்.

"வருண தர்மம்"

அதுபோலவே மக்கள் சமூகங்களிலும் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதாக உள்ள வருணாச்சிரம முறைகளைப் பெருமையாகப் பேசி அவற்றைப் புகழ்ந்து வருண தருமம் தவறாதவன்-குல தருமம் தவறாதவன், மத தருமம் தவறாதவன் என்பதாகவெல்லாம் துதிபடுவதும், வருணாச்சிரமமும், குல தருமமும் அனுசரிக்கப்படும் நாடே மேன்மையான நாடென்றும், நாகரீக நடென்றும், அதில்லாததாலேயே நாட்டிற்கு சுயராஜியமில்லாமல் போய்விட்டதென்றும், அவ்வருணாச்சிரமத்தைச் புனருத்தாரணம் செய்து காப்பாற்றுவதே சுயராஜய சித்தியென்றும் பேசப்படுவதெல்லாம் மக்களைக் கொடுமைப் படுத்தி ஒருவரையொருவர் இழிவுபடுத்தி, பிரித்து வைத்து ஒருவர் மேல், ஒருவர் ஆதிக்கம் செலுத்த ஆசைப்படும் ஒரு வஞ்சகத்தன்மையேயாகும். அன்றியும், அது அநாகரீகமான மிருக தத்துவமும், காட்டுமிராண்டித்தன்மையுமான குணமுமாகும். இந்த நிலைமையை ஒரு அறிவுள்ள முற்போக்குள்ள-உண்மை நாகரீகமுள்ள ஒரு சமூகம் இந்நாட்டு வருணாச்சிரம தருமம் அமைப்பைப் பார்க்குமானால் எவ்வளவு கொடுமைத்தன்மையும், இழிவுத் தன்மையும் பொருந்திய சமூகமென்று சொல்லக் கூடுமென்பதை யோசித்துப் பாருங்கள்.

வகுப்புப் பிரிவு

அதுபோலவேவகுப்பு பிரிவுகளைப்பற்றி பேசும் போதும் மேல் வகுப்பு-கீழ் வகுப்பு, முதலாளி-தொழிலாளி வகுப்பு, ஜமீன்தார்-குடியானவர் வகுப்பு என்பது போன்ற பல வகுப்புகள் இருந்து வருவது உலக நடப்புக்கு அமைக்கப்பட்ட நல்ல அமைப்புகள் என்றும், அவற்றால் உலகம் கடிகாரம் வேலை செய்வது போல் ஒழுங்காகவும், தானாகவும் கஷ்டமன்னியில் நடைபெறுமென்றும், இவ்வுயர்வு தாழ்வு, மேல் கீழ் வகுப்பு என்பவைகள் எல்லாம மனிதனுக்கு சம்பந்தமில்லாமலும் மனிதனால

[தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் மாணவர்கள் லிட்டரரி அசோசியேஷன்.

திரு. இராமநாதன் அவர்கள் முடிவுரை.

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் மாணவர்கள் லிட்டரரி அசோசியேஷன் ஆரம்ப விழாவில் தலைமை வகித்த திரு. இராமநாதன் M.A.B.L. அவர்கள் முடிவுரை:—

இன்றைய தினம் நடைபெற்ற மாணவர் சங்க ஆரம்ப விழாவில் பங்கெடுத்துக்கொண்ட மாணவர்கள் எல்லோரும் பயிற்சியுடனும், புத்திசாலித்தனத்துடனும் நடித்ததற்காக அவர்களைப்பாராட்ட விரும்புகிறேன். உபாத்தியாயர்களுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்ட வகுப்புகளில் மாணவர்களுக்கு ஏற்படும் அறிவைக்காட்டிலும் இவ்வித சங்கங்களில் சுயேட்சையாய் ஈடுபட்டுப் பழகுவதின் மூலம் ஏற்படும் அறிவே மிகவும் சிறந்ததாகும். இந்தப்பள்ளிக்கூடத்தில் இவ்வித சங்கங்கள் இன்னும் பல தோன்றவேண்டுமென்றும், அவற்றில் ஈடுபட ஒவ்வொரு மாணவனுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்றும் விரும்புகிறேன். இன்று ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் அவர்கள் நம் முன் நிகழ்த்திய அரிய உபன்யாசத்திற்காக அவர்களுக்கு நன்றிசெலுத்த நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயமானது தற்காலம் எவரும் காதால் கேட்பதற்கே பயப்படும் விஷயமாகும். ரஷியாவில் நடைபெறும் எந்த விஷயத்தையும் பற்றி ஆராய்ச்சி செய்வது ஆபத்தான காரியமென்று அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் எந்த விஷயத்தையும் உண்மையோடும், நடுநிலைமையோடும் பரிசீலனை செய்வதால் நன்மையே ஏற்படுமென்பதை ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாளவர்கள் இன்றையதினம் உங்கள் முன்மெய்ப்பித்துக் காண்பித்துவிட்டார்கள். அவர்களுடைய ஆராய்ச்சியால் நமக்கு ஏற்படும் பயனைப்பற்றி உங்களுக்குச் சில வார்த்தைகள்சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, நமது தேசத்தின் நிலைமையையும், ரஷியாவின் நிலைமையையும் ஒத்திட்டுப்பார்த்து ரஷ்யாவில் அனுஷ்டிக்கப்படும் கல்வி முறைகள் நமது நாட்டிக்குப் பொருந்துமாவென பரிசீலனை செய்துபார்க்கவேண்டும். 1917ம் வருஷம் ஏற்பட்ட புரட்சிக்கு முன் ரஷியாதேசம் எந்த நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையில் தான் இன்றைய தினம் நமது இந்தியாதேசம் இருக்கிறது. தற்சமயம் நமது தேசத்தில் கோடிக்கணக்கான பொது மக்கள் கல்வியறிவின்றி, மூடப்பழக்கங்களிலும், குருட்டு நம்பிக்கைகளிலும் ஆழ்ந்து, மதத்தின் பெயராலும், வழக்கத்தின் பெயராலும், எப்படி ஒடுக்கப்பட்டுவருந்துகிறார்களோ, அதே மாதிரி ஜார் மன்னர் காலத்தில் ரஷிய தேசத்து மக்கள் ஒடுக்கப்பட்டு வந்தார்கள். ஆனால் இன்று ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் எடுத்துக்காட்டிய கல்விமுறைகளை ரஷிய தேசத்தார் அனுஷ்டிக்க ஆரம்பித்து பத்து வருஷமாவதற்குள் உலகிலேயே மற்ற நாகரீகமடைந்த தேசங்களெனப்படும் எந்த தேசத்தாருக்கும் சமானமான உன்னத நிலைமையை அடைந்துவிட்டார்கள். இப்படி கல்வி அபிவிருத்தியில் அவர்கள் முற்போக்கடைந்துவிட்டார்களென்பதைப் பற்றி ரஷிய முறைகளை வெறுக்கும் கூட்டத்தார்கூட ஒப்புக்கொள்ளுகிறார்கள். மற்ற விஷயங்களில் ரஷிய முறைகள் என்ன பலனைக்கொடுத்த போதிலும் கல்வி விஷயத்தில் அவர்கள் ஜெயம் பெற்றே வருகிறார்களென்று ரஷியாவுக்குப்போய் நேரில் கண்டு வந்த பல அறிஞர் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள் நமது கவிச்சக்கரவர்த்தி திரு ரவீந்திரநாத் டாகூரும், இங்கிலீஷ் நடிக ஆசிரியர் திரு.பர்னார்ட்ஷாவும் சமீபத்தில் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களிலிருந்து இவ்வுண்மை தெளிவாக விளங்குகிறது. ஆகவே நம்மைப்போல் தாழ்மையுற்றிருந்த ஒரு தேசம் சகலரும் போற்றும் அளவுக்கு முற்போக்கடைய எந்த முறைகளைக் கையாண்டதோ அந்த முறைகளைக் கையாள நாம் தயங்கவேண்டியதில்லை.

ரஷிய போதனாமுறையில் அனுஷ்டிக்கப்படும் கொள்கைகளை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். இங்கிலாந்திலிருந்து ரஷியாவுக்கு சென்ற திரு பர்னார்ட்ஷா அவர்களுடன் உடன் சென்ற ஆஸ்டர்சீமாட்டி ரஷிய அரசாங்கத்துக்குத்தலைவராய் விளங்கும் திரு. ஸ்டாலின் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது ரஷிய பள்ளிக்கூடங்களில் பெஞ்சு, நாற்காலி, புஸ்தகம், முதலிய சாதனங்கள் மிகவும் சொற்பமாகவிருப்பதாக குறைகூறினார். திரு ஸ்டாலின் அவர்கள் அந்தக் குறையை ஒப்புக்கொண்டு ஆனபோதிலும் இங்கிலாந்து தேசத்து பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை அடித்து அக்கிரமம் செய்வதுபோல் ரஷியாவில் எந்தவிடத்திலும் நடைபெறவில்லையென்று பதிலுறுத்தி, ஆஸ்டர் சீமாட்டியின் வாயை அடக்கினார். இந்தியா தேசத்தில் கல்வியபிவிருத்தியடையவேண்டுமானால் ரஷியாவுக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடம் நமக்கும் ஏற்பட்டுதான தீரும். ரஷியாவைப் போல் இந்தியாவும், ஒரு ஏழ்மையான நாடுதான். ஆடம்பரமான கட்டடங்கள் கட்டவும், விலையுயர்ந்த மேஜை நாற்காலிகள் வாங்கவும் நம்மிடத்தில் பணமில்லை. பொதுஜனங்களின் ஒத்துழைப்பின் பலத்தாலும், குழந்தைகளின் சுயேச்சை உணர்ச்சியைப் பெருக்குவதின் மூலமுமே நமது நாட்டிலும் கல்வியபிவிருத்தியேற்படமுடியும். குழந்தைகளை அடிக்கக்கூடாது என்னும் கொள்கையை இன்று முதலே இந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் பின்பற்றுவார்களென எண்ணுகிறேன்.

ரஷிய தேசமானது தொழிலபிவிருத்தியில் முன்னணியில் நிற்கவேண்டுமென்று அரும்பாடுபடுகின்றது. ஆகவே கல்வி முறையின்மூலம் தொழிற்சாலைகளுக்கு அறிவும், ஆற்றலுமுள்ள தொழிலாளர்களை உற்பத்தி செய்ய முயற்சிக்கிறது. ஐந்துவருஷ வேலைத்திட்டத்தின் மூலம் ஏராளமான தொழிற்சாலைகள் ஏற்பட்டுவருவதால் பள்ளிக்கூடங்களில்படித்தவருக்கும் வேலை உடனேயே கிடைக்கிறது. நமது நாட்டிலோவென்றால் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளிவரும் கூட்டத்தில் பெரும்பாகத்தார் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். ஏனென்றால், நமது நாட்டுப் போதனாமுறையானது சர்க்கார் ஆபீஸ்களில் வேலை பார்க்க குமஸ்தாக்களை சிருஷ்டிப்பதற்காக ஏற்பட்டதேயன்றி தொழிலபிவிருத்திக்காக ஏற்பட்டதல்ல. ஆகையால்தான் நமது நாட்டுத்தொழில்களில் ஏற்படும் உத்தியோகங்களுக்கு அயல்நாட்டிலிருந்தே தொழிற்கல்வி கற்றவர்களை தருவிக்க வேண்டியிருக்கிறது. நமது நாட்டு சர்வகலாசாலைகளில் பி. ஏ., எம். ஏ., வகுப்புகளில் விஞ்ஞான சாஸ்திரம் படித்தவர்கள்கூட பின்னர் வக்கீல்களாகவும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும் சென்று தங்கள் விஞ்ஞான அறிவை வீணாக்கவேண்டியிருக்கிறதே தவிர தொழில் முறைகளில் அந்த அறிவை உபயோகப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பங்கிடைப்பதில்லை. தொழிற்கல்வியே நமது போதனாமுறையின் முதல் லக்ஷியமாக நாம் கருதும்வரை நமது பள்ளிக்கூடங்களால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. இவ்வூரின் பொதுஜன ஒத்துழைப்பால் ஏற்பட்டிருக்கும் இந்த மகாஜன ஹைஸ்கூலிலேயே கூடிய சீக்கிரம் தொழிற்கல்வி கற்றுக்கொடுக்க முயற்சி செய்யப்படுமென எண்ணுகிறேன்.

ரஷிய தேசத்தின் போதனாமுறையைக்குறை கூறவேண்டுமென நினைப்பவர்கள் ஒரே ஒரு விஷயத்தையே திருப்பித்திருப்பிச்சொல்லுகிறார்கள். அதாவது ரஷியப்பள்ளிக்கூடங்களில் நாஸ்திகத்தைக்குழந்தைகளுக்குப் புகட்டப்படுகிறதென்று சொல்லப்படுகிறது. 'மதக்கல்வியைப்பற்றி சற்றுமுன் உங்கள் முன்பேசிய திரு இராமசாமியவர்கள் விவரித்துப்பேசியிருப்பதால் அதே அபிப்பிராயத்தையுடையநான் மறுபடியும் அதைப்பற்றிப் பின்னும் பேசவேண்டியதில்லை. ஆனால் இந்தக்குறை சொல்லுகிறவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். குழந்தைகள் போதனாமுறையில் குழந்தைகளின் அறிவுக்கு ஒத்துவராத எதையும் சொல்லிக்கொடுக்கக்கூடாதென்ற கொள்கையை நிலைநிறுத்தப் பாடுபடும் இவர்கள் இங்கிலாந்து முதலிய நாடுகளில் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு மதக்கல்விகற்றுக்கொடுப்பதைப்பற்றி ஏன் வாய்பேசாமலிருக்கிறார்கள்? பைபிள் முதலிய மதபுஸ்தகங்களில் சொல்லியிருப்பவை அறிவுக்கு ஒத்துவராத விஷயங்களென்றும், அந்தந்த மதங்களைப் பின்பற்றுகிறவர்கள் தங்கள் மதப்பற்றின் காரணமாக கண்ணை மூடிக்கொண்டு நம்பித்தீரவேண்டிய விஷயங்களென்றும் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி அறிவுக்கு ஒத்துவராத விஷயங்கள் அநேகதேசங்களில் போதிக்கப்படுவதைக் கண்டிக்க முற்படாத கூட்டத்தாருக்கு ரஷிய போதனாமுறையைக்கண்டிக்க நாக்கில்லையென்பதை நாம் உணரவேண்டும். மேலும் ரஷியாவில் போதிக்கப்படும் நாஸ்திகமும், மற்றப் பொதுவுடமைக் கொள்கைகளும் குருட்டுத்தனமாய் மாணவர்கள் நம்பும்முறையில் போதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி ஏற்படும் சந்தேகங்களை நேரில் வெளிப்படையாகக் கேள்வி கேட்பதன் மூலம் அதனதன் காரணங்களை அறிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்ற தேசங்களில் மதத்தின் பெயராலும், தேசியத்தின் பெயராலும், குழந்தைகளின் அறிவுக் கெட்டாத சில விஷயங்களை அவர்கள் நம்பித்தான் ஆகவேண்டுமென்று வற்புறுத்தப்படுவது போல் ருஷ்யாவில் வற்புறுத்தப்படுவதில்லை' நாஸ்திகமென்பதும், பொதுவுடமையென்பதும் எந்த அளவுக்கு பகுத்தறிவுக்கு ஒத்ததாய் ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு நாஸ்திகத்திலும், பொதுவுடமையிலும் பற்று வைக்கவும், எந்த அளவுக்கு அவை பகுத்தறிவுக்கு ஒத்து வரவில்லையோ அந்த அளவுக்கு அவற்றை நிராகரிக்கவும் மாணவர்களுக்கு உரிமையுண்டு. உண்மைப்போதனாமுறையில் ஆர்வங்கொண்டவர்களுக்கு இம்முறையில் எவ்வித ஆக்ஷேபமும் ஏற்பட வகையில்லை.

மேலும், நமது தேசத்துப் பொதுமக்கள் ஆழ்ந்திருக்கும் அந்தகாரத்திலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டு

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க,

புராண இதிகாச கதைகளில் கடவுள்கள், கடவுள் சக்தி பொருந்திய மனிதர்கள் என்பவர்கள் பாத்திரர்களாக வந்து நடிக்கையில் அந்நடிப்பின் தன்மையானது பொது ஜனங்களின் நடத்தைக்கும், ஒழுக்கத்திற்கும் பயன் படுவதாகில்லாமல் அவைகள் அலக்ஷியப்படுத்தத்தக்கதாய் இருக்கின்றது. வளர்ச்சிபெறும் குழந்தைகளுக்கு முக்கியமாய் கற்பிக்கவேண்டியதெல்லாம் அவர்களுடைய சாதாரண நித்திய வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு விஷயத்திற்கும், அதனால் உண்டாகும் பலா பலனுக்கும் உள்ள சம்பந்தத்தைத்தெரிந்துகொள்ளத்தகுந்த சக்தி ஏற்படும் படியே கற்பிக்கப்படவேண்டும்.

ஆனால் கடவுள் சம்பந்தமான பிரார்த்தனைகளும் மதசம்பந்தமான சடங்குகளும், நித்திய கர்மானுஷ்டானங்களும், இயற்கையை மாறச்செய்யக்கூடியவைகளாயிருந்தாலும், அல்லது அவரவர்களுடைய சொந்த செய்கைகளின் பலாபலன்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றக்கூடியவைகளாயிருந்தாலும், எப்படியானபோதிலும் எதற்காகக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகின்றதோ அதற்கு இக்கதைகள் சிறிதும் பயன் படுவதாகாது. ஆனால் இக்கதைகளைப்பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்லும்போதே இவைகள் எல்லாம்கற்பனையாகச் செய்யப்பட்ட கதைகளேயொழிய வேறுவிதமான உண்மைகள் எதுவும் இதில் இல்லையென்று வியக்தமாகச்சொல்லி, ஒரு வேடிக்கைக்கற்பனைக்கதைஎன்கின்ற முறையில் சொல்லிக்கொடுக்கப்படுமேயானால் அவற்றால் எவ்வித தீங்கும் நேரிடாது. ஆனால் அந்தப்படிக்கு இல்லாமல் அக்கதைகளைத்துடங்கும்போதே அவை வெகுபக்தியுடனும், பயத்துடன் கேட்கப்படவேண்டியதென்றும், அவைகள் எல்லாம் சிறிதும் சந்தேகப்படக்கூடாத உண்மைகள் என்றும், அவற்றையெல்லாம் அப்படியே தான் நம்பி ஆகவேண்டும் என்றும் சொல்லி நிர்ப்பந்தப்படுத்துவதோடல்லாமல், அவற்றிலிருந்து அக்குழந்தைகளுக்குத்தோன்றும் சந்தேகங்களைப்பற்றிய கேள்விகளைக் கூட கேட்கவிடாமல் அடக்கிவைப்பதானதுகல்விகற்பிப்பதினுடைய பயனையும், கற்றுக்கொடுப்பதின் நல்லமுறையையும், தலைகீழாக மாற்றிவிடுகின்றது. பிள்ளைகளுக்கு மதசம்பந்தமான நம்பிக்கைகளுக்கேற்ற அறிவானது அவசியம் எனறு கருதப்பட்டால் அக்குழந்தை அக்கம்பக்கத்திலுள்ள மக்களிடம் இருந்து தானாகவேதெரிந்து கொள்ளுவதைவிட அவர்களை வளர்ப்பவர்களால் அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும். ஆனால், மத விஷயங்களை கற்றுக்கொள்வதற்கு சரியான முறை எது என்றால் ஒவ்வொருவரும் தாங்களாகவே தங்களது அறிவை தாராளமாய்ப் பயனபடுத்தி யோசித்து முடிவுகாணக்கூடிய சக்தி

கல்வியும், மதமும்.

(Dr. R. P. பராஞ்சிபே எழுதிய புத்தகத்தில் காணப்படும் சாரம்.)

[சென்ற வாரத்தொடர்ச்சி]

புராணம், இதிகாசங்களும், ஒழுக்கக்கல்வியும்.

அந்தபிறகு மதக்கல்வியில் தலையிடச் செய்வதேயாகும். அப்பொழுதுதான் அம்மதக்கல்வியின் பயன் வாழ்க்கைக்கு விரோதம் செய்யாமலும், அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் பயன்படுவதுமாகும்.

மதத்திற்கும், ஒழுக்கத்திற்கும் உள்ள சம்பந்தம் என்று சொல்லப்படுவதைப்பற்றி மற்றொரு தலைப்பில் விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாமானாலும். மதக்கல்வியானது மக்களுடைய ஒழுக்கத்திற்கு அவசியமான கல்வி என்று வாதிக்கப்படுகிறது. மதசம்பந்தமான உண்மைகளை ஒப்புக்கொள்ளாதவர்களால்கூட சில சமயங்களில் மதக்கல்வி ஒழுக்கத்திற்கு அவசியமானதென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் பிள்ளைகளுக்கு ஒழுக்கம் கற்பிக்கின்றமாதிரி என்பதில்நமது அபிப்பிராயம் என்னவென்றால் சரித்திர சம்பந்தமான உண்மைகளையும் உலகத்தின பல வேறு தேசங்களில் வசித்துவரும் மக்களின் நடவடிக்கைகளையும் தெரியும்படி செய்வதும், மற்றும் அக்குழந்தைகளின் மனப்போக்கு எதில் தானாய் செல்லுகின்றதோ அதில் விட்டுப்பிடிப்பதும், அவைகள் அறிய வேண்டும் என்று ஆசைப்படும் விஷயங்களை உண்மையாகவே சிறிதும் ஒளியாமல் தாராளமாய் எடுத்துச் சொல்லுவதும், அவர்கள் நடந்துகொள்ளும் விஷயங்களிலெல்லாம் நியாயமாயும், நடுநிலைமையாயும் நடந்துகொள்ளவேண்டும் என்கின்ற எண்ணம் தோன்றும் படியாயும், அவர்கள் பிரவேசிக்க எண்ணும் விஷயங்களின் பலன்களை அனுபவத்தில் உணரும்படியான மாதிரியாயும் கற்பிக்கப் பட்டால் குழந்தைகளுக்கு அவசியம் நல்லொழுக்கம் என்பதும், நல்வாழ்க்கை என்பதும் பிடிபட்டே தீரும் என்று கருதுகின்றோம்.

மற்றும், கல்வி ஒழுக்கம் ஆகியவைகளின் போதனையானது உபாத்தியாயர்கள் தங்களது அன்பினால் விஷயங்களை குழந்தைகளின் மனதில் தானாகவேபடும்படி செய்யத்தக்கதாகவும், அவர்களுக்கே ஒழுக்கத்தின் மூலமும், மற்றவர்களிடம் நடந்துகொள்ளுவதன் மூலமுமே மனிதன் மதிக்கப்படக்கூடுமென்பதையும் அனுபவங்களால் உணரும்படிச் செய்யவேண்டும். மற்றும் ஒழுக்கம், மத உணர்ச்சி முதலியவைகளை போதிப்பதின் மூலம் அவைகளை அறியச்செய்வதைவிட நூல்கள் வேடிக்கை நோக்கங்களிலும், விளையாட்டு நோக்கங்களிலும் கண்ணும் காக்ஷிகளாலும் தாங்களாகவே பேச்சுவார்த்தைகள் நடத்தும் வாதப் பிரதிவாதங்களாலும் எதேச்சையாய்ப்பார்க்க நேரும் சமயங்களாலும் விளக்கத்தக்கதாகச் செய்வது மிகுதியும் பலன் கொடுக்கத்தக்கதாகும்.

அப்படிக்கில்லாமல், உபாத்தியாயர் பயத்தினாலும், நிர்ப்பந்தத்தினாலும் புகுத்தப்படும் விஷயம் நற்பலன் கொடுப்பது அபூர்வமாகிவிடும், சாதாரணமாய் வளர்ச்சிபெறும் குழந்தைகளுக்கு ஒரு வித தூண்டுதல் உணர்ச்சியே அடிப்படையாய் இருக்கின்றபடியால் அவை பல விஷயங்களையும் உணர ஆசைப்பட்டு அக்கம்பக்கத்தையும், பெரியோர்களையும் பல கேள்விகள் கேட்க ஆரம்பிக்கின்றன. அவைகளுக்கு விடை அளிக்கும் விஷயம் மிக்க ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்யவேண்டியதாகும். ஏனெனில், அவ்விடைகளே அவற்றின் மனதில் பதியக்கூடியதாதலால் அவை ஆவல்கொண்டு கேட்கும் சமயத்தில் அளிக்கும் பதில்தான் பயன் பெறுவதாகும், மற்றும் நாமாக அவற்றிற்கு பசி இல்லாதகாலத்தில் ஊட்டும் உணவுபோல் அவை கவலையில்லாத காலத்தில் சொல்லிக்கொடுப்பதை விட விசேஷமானதாகும். ஆதலால் அம்மாதிரி கேள்விகளுக்குப பதில்சொல்லுமேதாவித் தன்மையான அறிவும், அனுபோகமும், பொறுமையும், அனுதாபமும் வேண்டியிருக்கின்றது.

ஆனால், இந்த அருமையும், அவசியமுமான குணம் அனேகமாக உபாத்தியாயர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும் காண்பது என்பது மிக்க அருமையேயாகும்.

மேலும், அவர்களுக்கு அதில் கவலையுமிருப்பதில்லை. அன்றியும் இம்மாதிரி குழந்தைகள் கேள்வி கேட்பதைப் பொறுக்காமலும் சில சமயங்களில் அலட்சியமாய் ஏதாவது வேண்டுமென்றேமறைத்துச்சொல்லியும் அது அவர்களுக்கு திருப்தியளிக்காவிட்டாலும் கீழ்ப்படியுந்தன்மையால் அவர்களை அடக்கி, திருப்பிக் கேட்கவிடாமலும், நாம் சொல்லுவது சரியல்லவென்பதை அது தெரிந்திருந்தாலும் அதையே நம்பும்படிசெய்து அப்பதிலுக்கும், அந்தப்பிள்ளைக்கும் நம்மை சம்பந்தமில்லாதவர்களாகவும் ஆக்கிக்கொள்ளுகின்றோம்.

இந்தக் காரணங்கள் விஷய ஞானத்தை அறிய ஆசைப்பட்ட குழந்தையின் முயற்சியைப்பயனளிக்காமல்செய்துவிட்டதோடு அது அறிந்தவிஷயங்களும் உருப்படுத்த முடியாமலும், தேர்ச்சிபெற்று நிலைநிறுத்தப்படமுடியாமலும், போகததக்க நிலை ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக, ஸ்திரீ புருஷ சம்பந்தமான பேதா பேதங்களைக் குறிப்பிடும்படியான வித்தியாசங்களை எடுத்துக்கொண்டு பார்ப்போம். குழந்தைகளால் இவ்வித வித்தியாசங்களைக் குறித்தாவது கேட்கப்படுமானால் அவைகள் யாவற்றையுமே பொருத்தமற்றதென்றும் அதிகப்பிரசங்கித்தனமானதென்றும், துன்மார்க்கத்தனமானதென்றும், இழிவானதென்றும் நாம் கருதி அக்குழந்தைகளையும் அதுபோலவே கருதும்படியும் செய்துவருகின்றோம். இக்கேள்விகளை இம்மாதிரியாக நாம் கருதுவதாலும் குழந்தைகளையும் கருதும்படி செய்துவருவதாலும் ஸ்திரீ புருஷ பேதத்தால் நமக்கு ஏற்படும் துன்பங்களும், கெடுதிகளும் [illegible] நிரந்தரமாய் இருக்கச் செய்து விடுகின்றன.

ஆனால் குழந்தைகளின் வளர்ச்சி காலத்திலும், விஷய ஞான உணர்ச்சி காலத்திலும் கல்வித்துறையிலும் ஸ்திரீ புருஷ பேதத்தைக் காட்டும் உண்மைகளையும் போதித்து விடவேண்டும் என்பதும் அது இன்றியமையாததென்பதும் இப்போது கல்விபோதிப்பதில் அபிப்பிராயம்கொடுக்க தகுதியுள்ள நிபுணர்கள் என்று சொல்லப்படுவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு வலியுறுத்தப்படுகின்றது. இதற்காக நாம் மகிழ்ச்சியடைகின்றோம். பாமர பெற்றோர்களும், பழமையைத் தன்மையாக்கொண்ட உபாத்தியாயர்களும் இன்னும் இதை உணராதிருப்பது பற்றி வருந்தாமலிருக்கவும் முடியவில்லை. (தொடரும்)

சாத்தன் குளம்.

வழியனுப்பு உபசாரம்.

கைரிய்யா சங்கத்தின் பிரசிடெண்டும், பொதுநல சேவையாளருமான ஆலி ஜனாப் மு. அ. மீ. அசனமீரா முஹியித்தீன் மரைக்காயரவர்கள் இலங்கைக்கு விஜயம்செய்வதை முன்னிட்டு சென்ற 25-9-31 மாலை 4 மணிக்கு ஜனாப் அ இ. மு. சுலைமான் பிரதர்ஸ் அவர்களின் இல்லமாகிய "இப்ராஹீம் வில்லா"வில் ஒரு டீ பார்ட்டி நடைபெற்றது. அவ்வமயம் கைரிய்யா சங்கத்தின் காரியதரிசி ஜனாப் ஆதம் சாஹிபவர்களால உபசாரம் கூறி மலர் மாலை சூட்டப்பட்டது. பின்னர் அங்கு விஜயம் செய்திருந்தவர்களனைவரும் தலைவரவர்களின் இல்லமாகிய "தாஹாயன் வில்லில்" வழியனுப்புவதற்காக வந்திருந்த பொழுது அனைவர்கட்கும் தேனீர் தாம்பூலம் வழங்கப்பட்டபின் கைரிய்யா வாசகசாலையின் சார்பாக எம். எம். யூசுப் சாஹிபவர்களால உபசாரபத்திரம் வாசிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

காந்தியின் 'ராம ராஜ்யம்'

(பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்)

கட்டுரை 7.

முன் தொடர்ச்சி.

எப்படியிருந்த போதிலும், விவாதத்திலிருக்கக்கூடிய ஒரு விஷயத்தை (இராம இராஜ்யம் என்பதைப்பற்றி) தாக்கித்து, வெற்றிமாலை சூடவேண்டுமென்பது எனது எண்ணமல்ல. ஆனால் அதனால் (இராமஇராஜ்யத்தினால்) ஏற்படுமிலாப நஷ்டங்களினின்றும் தப்பித்துக் கொள்ளச்செய்யப்படும் சூக்ஷியானது நீதிவழுவாமலும், முறை தவறாமலும், ஒழுங்காகவும், கிரமமாகவும் நடைபெற்றுவரும்படியாகவும், சுயேச்சையுடன் வாழும்படியாகவும், அல்லது ஐரோப்பா கண்டத்தில் இப்போதிருந்துவரும் எந்த அரசாங்க ஆட்சிக்குச்சமமாகவாவது, அல்லது நாம் இப்போது விரும்பும் அரசாட்சிக்குளத்தகைய நிபந்தனைகளை ஏற்படுத்துகின்றேமோ அந்த மாதிரியாகவாவது 'நமது இராமஇராஜ்யம்' நடைபெறுமா? என்பதை மக்கள் உணரவேண்டுமென்பதற்காகவேதான் வற்புறுத்தி, வற்புறுத்திக்கூறுகிறேன்.

இரண்டாவதாக, காங்கிரஸ் காரியக்கமிட்டியின் அங்கத்தினர்களைத்தேர்ந்தெடுக்கும் விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தற்காலம் காரியக்கமிட்டியில் அங்கம் வகித்துக்கொண்டு வருபவர்களைப்பற்றிநான் குறைகூறவிரும்பவில்லை. ஆனால் அக்கமிட்டியின் அமைப்பான நியாயமாகவும், ஒழுங்காகவும், கிரமமாகவும் நடைபெற்றுவரும் சுதந்திரமுள்ள ஒரு அரசாங்கத்தின் ரீதிக்கு நேர்விரோதமானக் கொள்கைகளைத்தழுவியிருப்பதாகவே காணப்படுகின்றது. காரியககமிட்டியின் அங்கத்தினர்கள் பலரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாகவேதானிருக்கவேண்டுமென, அக்கமிட்டி நிருமாணத்தில் ஒரு நிபந்தனை யேற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், மனப்பூர்வமாகவும், வாஸ்தவமாகவும், ஆவலாகவும், ஊக்கமாகவும், உண்மையாகவும் வேண்டிக்கொள்ளபபட்ட எல்லா முறையீடுகளையும் கவனியாது, அசட்டைசெய்து நிராகரித்ததுமன்றி, அக்கமிட்டியானது தன்னால் நியமிக்கப்படுபவர்களை மட்டும் அங்கத்தினர்களாக நியமனம் செய்யவேண்டுமேயல்லாது, மற்றபடி வேறு ஒருவரையும் அங்கத்தினர்களாக நியமிக்கக்கூடாதென காந்திஜீ அவர்கள ஆக்ஷேபித்திருக்கின்றார். யாதொருவித தொந்திரவும், வலுக்கட்டாயமுமின்றி அத்தேர்தல்நடைபெற்றிருந்தபோதிலும கூட, ஒரு சமயம் அதே அங்கத்தினர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், அதைப்பற்றி நான் கூறவிரும்பவில்லை. நான் கூறுவதின் முக்கியாம்சமென்னவெனில் சுதந்திரமானதும், தன்னிஷ்டமானதுமான தேர்தல் நடைபெறவில்லை யென்பதேயாகும்.

இம்மாதிரி தேர்தல் முறையானதுஇராமஇராஜ்யக்கொள்கையாகுமேயல்லாமல், மற்றபடி தற்கால, நவீன அரசாங்கத்தின் தேர்தல் கொள்கையாகவேயாகாது. ஐரோப்பியர்கள் சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும் நம்பிக்கை பூண்டு, அயலாரை நேசித்து, ஒரு நகரவாசி எவ்வளவு நல்லவராகயிருக்கிறாரோ, அவ்வளவு நல்லவராக இன்னொரு நகரவாசியுமிருக்கக்கூடுமெனக் கருதிவருவதுடனின்றி, பொது மக்கள் எவ்வளவு தூரம் தங்கள்மீது நம்பிக்கையுடனிருந்து வருகின்றார்களோ, அதுவரையிலும் அந்நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பவர்களும் தங்களுடைய கடமையையுணர்ந்து, நாட்டிற்கு நன்மைகளை யளிக்கக்கூடிய காரியங்களில் ஈடுபட்டு வருவார்களென்கிற திடமான நம்பிக்கையையுடையவர்களாயிருக்கின்றார்கள். ஆனால் இராம இராஜ்யக்காரரோ, இந்த முக்கியமான விஷயத்தில் நம்பிக்கை யற்றவர்களாகயிருக்கின்றார்கள். இவ்விஷயமோ நிரூபிக்கப்படக்கூடியதாயில்லை. ஏனெனில், இவ்விஷயமானது மதத்தில் காணப்படும் நிபந்தனையையாவது கோட்பாட்டையாவது அல்லது சித்தாந்தத்தையாவது தான் யொக்கும். ஆகையால் நாம் அதை ஒன்று நிச்சயமான அல்லது உறுதியான உண்மையெனவாகிலும் அங்கீகரிக்க வேண்டும் அல்லது அதைப்பொய்யென யெண்ணியாகிலும் நிராகரித்துவிட வேண்டும். நாம் இந்த உண்மையை அங்கீகரிப்பதாக யிருக்கும் பட்சத்தில், ஐரோப்பாவிலிருந்து நாம் கற்றுக்கொண்ட முறைகளைப் பின்பற்றி, அவைகளின் மூலமாக நமது கவர்ன்மெண்டை நடாத்த வேண்டும். இல்லையாகில் நம்மால் முடியவே முடியாது. மேலும், இந்தியாவானது அம்முறையை, வேண்டுமானால்,பகிஷ்கரிக்கலாம். அல்லது நிராகரித்து விடலாம். ஆனால், அப்படிச் செய்வதானது இந்தியாவின் தீமைக்கும், அழிவுக்கும் தான் காரணமாகுமேயல்லாமல், வேறொன்றுக்கு மல்ல. ஏனெனில், அபரிமிதமாகக் காணப்படும் ஐரோப்பியர்களின் நாகரீகமும், திராணியும், வல்லமையும் அரசாங்கமும் உண்டாவதற்கு அவர்களுடைய சகோதர வாஞ்சையும், சகோதரத்துவமும். சமத்துவமும் முக்கிய காரணங்களாவதுடன், அவர்களுடைய தேசத்தின் சுதந்திரம் என்பதற்காக வேண்டியும் அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளையும், நாகரீகத்தையும் காப்பாற்றுவதற்காக வேண்டியும், அவர்களுடைய மக்கள் தங்களுடைய இரத்தத்தை சிந்துவதற்குத் தயாராக இருத்தலுமே முக்கியக் காரணமாகும்.

நாம் இது வரையும் மேலே கூறிக் கொண்டு வந்ததிலிருந்து ஏற்படக்கூடிய முடிவு இதுவேயாகும். அதாவது, இந்தியர்களின் நாகரீக மென்பதாக ஏதாவதொன்று இருக்கிறதா? அல்லது நாகரீகமென்பதானது பிதுரார்ஜித சொத்தா? அல்லது ஏதாவதோர் சந்தர்ப்பத்தில் மக்களுக்குவேண்டிய உயர்ந்த அபிப்பிராயங்களையும், எண்ணங்களையும், செய்கைகளையும் அளிக்கக் கூடியதானது தான் நாகரீக மெனக் கூறப்படுவதா? என்பவைகளே தான். மேலும், இரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப்பாவை நாம் எதிர்த்துப் போராட நமக்குப் போதுமான பலமில்லா திருப்பதற்காக வேண்டியாவது, அல்லதுஐரோப்பாவானது நமது வலிமையற்ற தன்மையை யுணர்ந்து, அவளுடைய வலிமையின் காரணமாய் நம்மை அடக்கி, ஆண்டு கொண்டு வருவதால் அவள் தன்னைத்தானே இத்தகையச் செய்கையால் பழுதாக்கிக் கொண்டதற்காக வேண்டியாவது நாம் ஐரோப்பாவைப்புறம்பேசித்தள்ளி விடலாமா? அல்லது நாமே அவளிமிருந்து இதற்காக வேண்டி விலகிக் கொள்ளலாமா?

நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளுவதுடன், அவளையும் காப்பாற்றுவதற்குச் சிறந்த மார்க்கமென்ன? ஏனெனில், அவள் தன்னுடையவழியையேத் தான் பின்பற்றிச் செல்லக்கூடுமெனவும், நாம் வேறு வழியில் தான் செல்ல முடியுமெனவும் நாம் நினைப்பதானது சுத்த மயக்கமும் பொய்மையுமே தானாகும். நன்மைக்கோ, அல்லது தீமைக்கோ நாம் ஐரோப்பாவுடன் ஒன்றாகச் சேர்த்து வலுவாக, இறுக்கிப் பிணைக்கப் பட்டிருக்கின்றோம். நாமோ இயந்திரங்களை ஒழித்துத் தள்ளி விட்டு, பல்வேறு நாமங்களை அவைகளுக்குச் சூட்டலாம் மேலும், விஞ்ஞான சாஸ்திரத்தை சாத்தானின் செய்கையெனவும் கூறலாம். ஆனால் இயந்திரங்களின் உதவியைக் கொண்டே நாம் இயந்திரங்களையும், விஞ்ஞான சாஸ்திரங்களையும் போதுமானபடி பாதுகாக்காவிடில், அந்த இயந்திரமே நம்மையும், நமது தேசத்தையும் நிர்மூலமாக்கிவிடும். அச்சமயத்தில் இதற்காக வேண்டிசாத்தானென க்கூறப்படும் விஞ்ஞான சாஸ்திரத்துடன் நாம் நேருக்கு நேராக கை கலந்து, போராடத்துடங்குவோமேயானால், அப்பொழுது தான் அது நம்மைக் காப்பாற்ற வந்திருக்கும் ஓர் உண்மையான தேவதூதனென நாம் அறிந்து கொள்ளுவோம். உண்மையும், சாத்விகமுமா உங்களைக் காப்பாற்றப்போகின்றது? அரசியல் சட்டத்திலும், விதியிலும், நீதியிலும் உண்மையென்பதென்ன? அதனுடைய எல்லைகளென்ன? நம்முடைய வறண்ட பூமிகளுக்கு சிந்துநதியும், கங்கைநதியும், பிரமபுத்ராநதியும், கிருஷ்ணா நதியும், காவேரிநதியும் தங்களுடைய நீரைப்பாய்ச்சிக் கொண்டு வரும் வரையிலும், இந்தியாவில் பத்து லட்சக் கணக்கான தொழிலாளர்களிருக்கும் வரையிலும், பாதாதிகேசம் வரை ஆயுதங்கள் பூண்டு, அவைகளை உங்கள் மீது உபயோகிக்கக் கொஞ்சமும் பின் வாங்காமலும், அஞ்சாமலுமிருக்கக் கூடிய மக்கள் வாழும் இந்தப் பரந்த உலகத்தில் உங்களுடைய சாத்வீகக் கொள்கையானது உங்களுக்கு எத்தகையப் பயனையளிக்கும்? அல்லது, அது உங்களை எவ்வளவு தூரந்தான் காப்பாற்ற முடியும்? கான்பூர் கலவரத்தின் போது ஹிந்து விஷமக் காரர்களும், முகமதிய விஷமக்காரர்களும் ஒரு

வரை யொருவர் கொன்றும், கொலை செய்தும், சித்திரவதை புரிந்தும், பெண்களை பலாத்காரம் செய்து, அவர்களுடைய கற்பை யழித்தும், கொள்ளை யடித்தும், வீடுகளுக்கு நெருப்பிட்டுக் கொளுத்தியும் வரும் பொழுது உங்களுடைய சாத்வீகக் கொள்கையானது உங்களுக்கு எவ்வளவு தூரம் உதவியளித்தது? அதனால் என்ன பயனை யடைந்தீர்கள்?

திரு. கணேஷ் சங்கர் வித்தியார்த்தி யென்பவர் தம்மை பிரமிப்படையும் படிச் செய்த இக்கலகத்திற்குக் காரணமாயிருந்ததான பலனற்ற ஒன்றைக் கண்டு பிடித்தலை அறவே விட்டு விட்டு, தம்முடைய அபாரதமானதும், அளவிடக் கூடாததுமான தைரியத்தைக் கைபிடித்து. தைரியமுள்ள சில ஆடவர்களை ஒன்று கூட்டி, பெண்களை அவமானப்படுத்தியும், சொத்துக்களை கொள்ளை யிட்டவர்களுமானக் கோழைகளை இரத்தத்தை சிந்தியும், ஆயுதங்களி னுதவியைக் கொண்டும் அடக்கி, ஆண்டு, அவர்களை நிர்மூலம் செய்யத் துணிந் திருப்பாரேயானல், அப்பொழுது நிலைமை யெவ்வாறிருந்திருக்கக் கூடுமென நினைத்து நான் அடிக்கடி ஆச்சரியப் பட்டதுண்டு. நடைபெற்ற இக்கலவரத்தில், கான்பூர் வாசிகளிடம் தைரிய மெனபதில்லாமல் போய் விடவில்லை. தைரியமென்பதோ அவர்களுக்குப் போதுமான அளவு இருந்துதா னிருந்திருக்கின்றது. ஆனல் ஒவ்வொரு நகரவாசியும் சாத்வீகக் கொள்கையையே தான் கைப் பற்ற வேண்டுமென அவர்களுக்குத் தவறுதலாகப் போதிக்கப் பட்டிருந்ததே இதற்குக்காரணமாகும். ஆனல், இக்கொள்கைக்கு மாறாக கான்பூர் வாசிகள் அத்தருணத்தில், கிறிஸ்துவ ஐரோப்பாவிலிருந்து- கிறிஸ்துவர்களாலும், இயந்திரங்களாலும் நிரம்பியுள்ள ஐரோப்பாவிலிருந்து-நாம் அறிந்தும், கற்றும் கொண்டதுமான அந்த ஆச்சரியகரமான இரத்த வெறிபிடித்ததும், ஒப்புக் கொள்ள வற்புறுத்துவதுமான சட்டத்தை நாம்கடைப்பிடித்து விஷமம் செய்தவர்களில் சிலரைச் சுட்டு, வீழ்த்தி யிருந்திருப்போமேயானல், அப்பொழுது நூற்றுக் கணக்கான மக்கள ஒருவரை வரை யொருவர் வெட்டிக்கொண்டும், கொலை செய்து கொண்டும் மடிந்து போயிருக்க வேண்டிய அவசியமும் மேற்பட்டிருக்காதென்பதுடன், கான்பூரிலுள்ள வீதிகளும், சந்துகளும் இறைச்சிக்கடைகள் (கசாப்புக்கடைகள்) போல்காணப்படவேண்டிய அவசியமுமேற்பட்டிருக்காது. இராம இராஜ்டமாவது, அல்லது தரும இராஜியமெனக் கூறப்படுவதாவது நமக்கு எவ்வாறு விடுதலையளித்திருக்கக்கூடுமென்பது தான் எனக்குப் புலப்படவேயில்லை.

பிரிட்டனுடைய கரங்களிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ளும் முன்பே நமது அரசியல் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க போதுமான பலம் பொருந்தியவர்களாக யிருக்கின்றோமா யென்பதை நமது சந்ததியார்களே நிச்சயித்துப்பார்க்கட்டும். அவ்வாறு விடுவித்துக்கொள்ள ஆசைப்பட்டால் யுத்த முறைமைகளை நாம் மேல்நாட்டாரிடமிருந்து கற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். தற்கால விஞ்ஞான அறிவும், ஆராய்ச்சியுமின்றியும் சமாதான காலங்களில்இயந்திரங்களை உற்பத்திசெய்தும், அவைகளை அடிக்கடி உபயோகித்துக்கொண்டும் வராவிடில்நமதுயெண்ணம் நமக்குகைகூடி வரவேவராது. மேலும்நமக்குப்போதுமானசெல்வமில்லாமலும், அன்னியநாட்டுவியாபாரங்களின்றியும், வாழ்க்கையின் லட்சியங்களையும், இன்பங்களையும் போதுமானபடி அதிகரிக்கச்செய்யாமலும், நிரந்தரமான வார்த்தைகளின்றியும், விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய சக்தியின்றியும, கோரிக்கைகளும், விருப்பங்களுமின்றியும், அத்தகைய கோரிக்கைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்ற ஆவலின்றியும், அதிகாரங்களின்றியும், நமது தேசத்திய அதிகாரத்திற்கும், விருப்பத்திற்கும் விரோதிகளாயிருக்கக் கூடியவர்களை எதிர்த்துப் போராடி, அவர்களை தும்சமும், நாசமும் செய்து ஒழித்துவிடுவதற்குப்போதுமான ஆற்றலும், மனோதிடமும், வல்லமையுமில்லாதிருந்தாலும் நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. நமது எண்ணங்களும் நமக்குக்கைகூடிவரவும்வராது. நமது லட்சியங்களையும்நாமடையமுடியவும் முடியாது.

இராம இராஜ்யமெனக் கூறப்பட்டு வருவதானது, ஒழிக்கமுடியாத அபாயங்களையும், பல்வேறு மூடப்பழக்க வழக்கங்களையும், அடிப்படையாகவும், மூலாதாரமாகவும் கொண்டிருப்பதான இந்து மதத்தையேச்சார்ந்ததாக விளங்கிக்கொண்டு வருமா? அல்லது வாராதா? என்பது எனக்குப் பெரிய சந்தேகமாகவே இருந்து கொண்டு வருகின்றது. மேலும், இந்தியாவானது தன்னுடைய மூடநம்பிக்கைகளிலிருந்தும், மூடக் கொள்கைகளினின்றும் எப்பொழுதாகிலும் விடுபட்டு, தன்னுடைய உரிமைகளுககாகப் போராடும்படியான வலிமை பொருந்திய நிலைமையை என்றுதான் அடையுமோ என்பதும் எனக்குப்பெருத்த சந்தேகமாகவேஇருந்துகொண்டுவருகின்றது.

குறிப்பு:—திரு. ஜார்ஜ் ஜோசப் அவர்களின் 'இராமராஜ்யம்' என்னும் கட்டுரை இத்துடன் முடிவுற்றது. (ப—ர்.)

பெருந்துறை.

டாக்டர் எஸ் ஜகதீசன் அவர்களுக்கு வழி அனுப்பு உபசாரம்.

பெருந்துறையில் 2, 3 வருஷகாலமாய் சாக்காரார் ஆஸ்பத்திரி டாக்டராய் இருந்துவந்த டாக்டர் எஸ். ஜகதீசன் எல். எம். பி. அவர்கள் செலக்ஷன் கிரேடில் உயர்த்தப்பட்டு மேட்டுப் பாளையத்திற்கு மாற்றப்பட்டதை முன்னிட்டு 23-9-31தேதி மாலை 6-மணிக்கு பெருந்துறை லோகல் பண்டு சத்திரத்தில் ஒருவழி அனுப்பு உபசாரம் நடந்தது. அவ்வுபசாரத்திற்குச்சுற்றுப்பக்கத்திய பல இடங்களில் இருந்தும் சுமார் 200 300 கனவான்களுக்கு மேலேயே விஜயம் செய்திருந்தார்கள் சிற்றுண்டி, பலகாரம், பழவகை, தேநீர் முதலியவைகள் மிகவிமரிசையாய் வழங்கப்பட்டபிறகு சத்திரத்தின் முன்பக்க மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப் பட்டது. அக்கூட்டத்தில் புதிதாய் வந்த டாக்டர் திரு ராஜு அவர்களும் பெருந்துறை ரிடையர்டு டிப்டி கலக்டர் திரு பி. வி. சுப்ரமணிய அய்யர், டிப்டி தாசில்தார், சால்ட்சர்க்கின் இன்ஸ்பெக்டர், போலீஸ் சர்க்கின் இன்ஸ்பெக்டர், சப்ரிஜிஸ்டரார் சப்இன்ஸ்பெக்டர், ஹெல்த இன்ஸ்பெக்டர், டி. பி. ஓவர்சியர், ரிவனியூ இன்ஸ்பெக்டர், முதலிய அதிகாரிகளும் திருவாளர்கள் அப்பிசமார் மடாதிபதி ஆண்டமுத்துக்கவுண்டர், வக்கீல் தெய்வசிகாமணி கவுண்டர், வக்கீல் இராஜகோபால செட்டியார், சென்னிமலை வி. எஸ். பழனியப்ப முதலியார் விஜயமங்கலம் கே. எஸ். இரங்கய்ய கவுண்டர், ஈரோடு ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், சி. நடராஜன், ஆர். இராமசாமி, மணியம் பி. வி. இராகேஸ்வரய்யர், பி. வி. கணபதி அய்யர், நாராயணசாமி பிள்ளை, என். இலட்சமணமுதலியார், சீதப்ப முதலியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் கடை முதலாளிகள், ஏஜண்டுகள், சென்னிமலை ஹெட்மாஸ்டர் திரு நாயர், உபாத்தியாயர் திரு இரணயப்ப அய்யர்மற்றும்ரூரல்டிஸ்பென்சரி டாக்டர்கள், பெருந்துறை வியாபாரிகள் ஆகியவர்களும் மற்றும் அநேககனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். புகைப்படம் எடுத்து சிற்றுண்டிவழங்கிக் கூட்டம் துவக்கினதும் ஈரோடு திரு ஈ. வெ. இராமசாமி அவர்கள் அக்கிராசனம வகிக்க வேண்டுமாய்பிரேரேபித்து, ஆமோதிக்கப்பட்டதும் திரு இராமசாமி அக்கிராசனம் வகித்ததும் எல்லோருக்கும் மாலை சூட்டப்பட்டது.

திரு. இராமசாமி அவர்கள் எழுந்து சாக்காரார் அதிகாரிகளுக்கும், ஊர் பொது ஜனங்களுக்கும் இருக்கவேண்டிய தன்மையைக்குறித்துப் பேசி, ஒரு வைத்திய அதிகாரி இவ்வளவு தூரம் மக்களின் திருப்தியை பெற்றது பாராட்டத்தக்கதென்றும், இவர்மாற்றுதலை அடைந்து போவதால் மக்களுககு ஏற்பட்டுள்ள சஙகடத்தைப் புதிய டாக்டர் ராஜு அவர்கள் அவருக்கு பதிலாய் வந்திருப்பதானது பெருத்த ஆறுதலைக்கொடுத்திருக்கின்றதென்றும் சொன்னார். பிறகு டிப்டி கலக்டர் திரு. பி. வி. சுபரமணிய அய்யர் அவர்கள், உபாத்தியாயர் திரு இரணியப்ப அய்யர் அவர்கள், திரு என். லக்ஷ்மணன் அவர்கள் பேசினார்கள். பிறகு திரு ஈ. வெ. இராமசாமி முடிவுரையாகப் பேசுகையில் எல்லா அதிகாரிகளும் இந்தப்படி நடந்துகொண்டால் நலம் என்று சொல்லி, புதியடாக்டரையும் வரவேற்று தனது உரையை முடித்தார். பிறகு மடாதிபதி திருவாளர் ஆண்டமுத்துகவுண்டர் அவர்கள் தலைவருக்கு நன்றிகூறினர். திரு என் லக்ஷ்மணன் அவர்கள்சபையோருக்குநன்றி கூறினர். தாம்பூலம், சந்தனம் வழங்கப்பட்டு கூட்டம்முடிந்தது. இரவு ஒரு சஙகீதக்கச்சேரி நடந்தது.

ஓர் அநுதாபம்.

அபிராமநத்தம முஸ்லீம்நேயர் சங்கத்தின் ஆதரவில் 21-9-31ந் தேதி மாலை 4-30 மணிக்கு இவ்வூர் ஆலிஜனுப் அல்மஹாஜ் மௌலானா மௌல்வி உ. மு. அப்துல் காதர்ஆலிம் சாகிப் அவர்களின் தலைமையில் நமதுசங்க அபிமானி அம்பல சிரோன்மணி விஜியன் அப்துரஹ்மான் (மர்ஹூம்) அவர்கள் காலஞ்சென்றமைக்காக ஒரு அநுதாபக் கூட்டம்கூடியது.

அம்பலம் மர்ஹூமவர்களின் ஆத்மா சாந்திக்காக கத்தம பாத்திஹா முறைப்படி ஓதப்பட்டு ஆலிஜனுப் அ. அப்துரஹ்மான் அவர்கள் அம்பலம் மர்ஹூமவர்கள் தம் ஜீவியத்தின்போது செய்துபோந்துள்ள பேருபகாரங்களில் பலவற்றை எடுத்துக்காட்டி அம்பலம் மர்ஹூமவர்களின் மரணம் ஈடுசெய்ய முடியாதென்றும், வெகுவாக சுமார் அரை மணி நேரம் பேசி அமர்ந்தார். நீண்டதோர் துவா ஓதப்பட்டதானதும் சபையினருக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டு சுமார் 5.45க்கு கூட்டம் இனிதே கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மூன்று சகோதரர்கள்.

வைதீகன், பண்டிதன், பக்திமான்.

நமது ஆராய்ச்சி.
(சாமி சிதம்பரனார்.)

ஒவ்வொரு வார்த்தைகளும் ஆதியில் ஒரு பொருளைக் குறிப்பதற்காகவே ஏற்படுத்தப் பட்டவையாகும். ஆனால் பிற்காலத்தில் அந்த முறை மாறுதலடைந்து ஒரு பதத்திற்குப் பல பொருள்கள் வழங்கத் தொடங்கி விட்டன. இது ஒரு ஆச்சரியமல்ல. சாதாரணமாக நடைபெறும் இயற்கை தான். உதாரணமாக இரண்டொன்றைப் பார்ப்போம்.

வைதீகன்.

வைதீகன் என்றஒரு பதத்தை எடுத்துக் கொள்ளுவோம். இது பண்டைக்காலத்தில் ஒரு பரிசுத்தமான பதமாக வழங்கியது. இப்பெயர் பூண்டவன் எல்லோராலும் உயர்ந்தவனாகக் கருதப்பட்டான். சிறந்த ஒழுக்கமுடையவனாகவும், உயர்ந்த குணமுடையவனாகவும், பெரிய அறிவுடையவனாகவும் கருதப்பட்டான். இதற்குக் காரணம் யாதெனின், வேத சம்பந்த முடையதற்கு வைதீகம்என்று பெயர். வேத சம்பந்த முடையவன் வைதீகன் என்பவான். ஆகவே வேதத்தை நன்றாய் கற்றவன், வேதத்தின் பொருளை நன்றாய் உணர்ந்தவன். அப்பொருள்களை உண்மையாய் நம்புகின்றவன். அதிற்கூறிய ஒழுக்கங்களைப் பின்பற்றி நடப்பவன் வைதீகனாவான். இவ்வாறு இருக்கின்றவனுக்குப் பெருமை யுண்டாவதற்குக் காரணம், வேதம் தெய்வத்தன்மையுடையதென்றும், அரிய விஷயங்களை விளக்கமாகக் கூறுகின்றதென்றும், அக்கொள்கைகள் உலகுள்ளளவும் அழியாமல் நிலைத்திருக்கக் கூடியன வென்றும், வேதத்தைக் கொண்டு பிழைத்தவர்கள் கூறியதைப் பொது ஜனங்கள் நம்பினர். ஆதலால் இத்தகைய வேத ஒழுக்கமுடையவனை வைதீகன் என்று பெருமைப்படுத்தி மதிக்கலாயினர். ஆகையால் வைதீகன் என்பதற்கு எல்லோரும் மதிக்கக்கூடிய பொருள் வழங்கிற்று. ஆனால் இக்காலத்தில் வைதீகன் என்பதற்கு என்ன பொருள் வழங்குகின்றது என்பதைப் பார்ப்போம்.

இக்காலத்தில் வேதம் என்பதன் மதிப்புப் பறந்து விட்டது. வேதம் என்றால் பார்ப்பனர்களுக்கு மட்டிலும் சொந்தமானது, மூட நம்பிக்கைக் குரிய விஷயங்களைப் பற்றிக் கூறுவது. இக்காலத்தில் மக்கள் தமது உலக வாழ்க்கையைச் சுகமாக நடத்துவதற்குரிய விஷயங்கள் ஒன்றும் கூறப்படவில்லை. மக்களுக்கு வரும் பசிப்பிணியைப் போக்குவதற்குரிய விஷயங்கள் ஒன்றும் அதில் இல்லை. மக்களுடைய பகுத்தறிவை வளர்ப்பதற்குரிய விஷயங்களுமில்லை. தேச முன்னேற்றத்திற்கான செய்திகள் ஒன்றுமில்லை. தேச விடுதலைக்கான வழிகள் ஒன்றும் சொல்லப்படவில்லை. வேதத்தைப் படித்தவன் பிச்சை வாங்கிப் பிழைக்க வேண்டியவனே தவிர வேறு கௌரவமான ஒரு தொழில் செய்து ஜீவிக்க வழியற்றவனாவான். வேதம், ஜாதி பேதத்தையும், ஒருவர்க்கொருவர் துவேஷத்தையும் உண்டாக்குகின்றது. ஆதலால் வேதத்தைப் படித்த வைதீகன், தீண்டாமைத் தன்மையுடையவனைப்போல நவீன உலகத்திற்கு ஏற்றவனாக மாட்டான். பழைய அழுக்கு மூட்டையாக உள்ளவன். துருப்பிடித்த மூளையுள்ளவன். தன்னையே அறிவுடையவனாக நினைத்துக் கர்வமடைகின்ற முட்டாள்; தன்னையே சிறந்த நாகரீக முடையவனாக நினைத்துக் கொள்ளுகின்ற அநாகரீகன், தன்னையே சிறந்த ஒழுக்க முடையவனாக நினைத்துக் கொள்ளுகின்ற கூடாவொழுக்க முடையவன் என்பது உலகப் போக்கை உற்றுணரும் அனைவருக்கும் தெரிந்த செய்தி. ஆகையால் வைதீகன் என்னும்சொல் இழிவைத் தரும் சொல்லாக மதிக்கப் பட்டு விட்டது. வைதீகன் என்பவன் முட்டாள் என மதிக்கப் பட்டு விட்டான். வைதீகன் என்பவன் அநாகரீகன் என மதிக்கப் பட்டு விட்டான். இவ்வாறு மதிக்கப் படுவது தவறுமல்ல, பொய்யுமல்ல என்பது நமது அபிப்பிராயம். ஆதலால் இதை ஒப்புக் கொள்ளுகின்றோம். நீங்களும் நான் மேலே கூறிய விஷயங்களை நன்றாய் யோசித்துப்பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

பண்டிதன்.

இரண்டாவது, பண்டிதன் என்பதன் பொருளை எடுத்துக் கொள்வோம். முன் காலத்தில் பண்டிதன் அதாவது புலவன் என்பவன் பொது ஜனங்களாலும், அரசர்களாலும் கௌரவிக்கப் பட்டு வந்தான். அரசர்களும், நாட்டில் உள்ள பெரியவர்களும், பண்டிதர்களுடைய நன்மதிப்பைப் பெற வேண்டுமென விரும்பினர். பண்டிதர்களால் புகழப்படாதவர்கள்சிறந்தவர்களல்லர். பண்டிதர்களால் பாராட்டப்படாத அரசன் சிறந்த அரசன் அல்லன். பண்டிதர்களால் புகழ்ந்து கூறப்படாத தேசம் சிறந்த அரசியல் அமைப்புள்ள தேசமல்ல என்று கருதப்பட்டது.

அன்றியும், பண்டிதர்கள் அரச சபையில் அரசனுக்கு ஆலோசனை கூறும் அங்கத்தினர்களில் ஒரு உறுப்பினராக இருந்தனர். அரசனும் இராஜகாரியங்களில் பண்டிதர்களுடைய ஆலோசனையை விரும்பிக் கொண்டிருந்தான்.

பண்டிதர்கள் இவ்வாறு பெருமையடைந்திருந்ததற்குக் காரணம் அவர்களிடமிருந்த மிகுந்த திறமையும், நுட்ப அறிவும், பரந்த நோக்கமும், ஆழ்ந்த உலக அறிவும், தேர்ந்த அரசியல் ஞானமும் இருந்த காரணத்தால் தான்.

பண்டிதம், பாண்டித்யம் என்பன ஒரு பொருட் சொற்கள். நல்ல தேர்ச்சி யுடையவன் பண்டிதன். எதில் நல்ல தேர்ச்சி வேண்டும்? எல்லாவற்றிலும் நல்ல தேர்ச்சி வேண்டும். சாதாரணமாக்"கண்டதுகற்கப் பண்டிதனாவான்"என்னும் பழமொழியை நாம்கேட்டிருக்கிறோம். இது எல்லா விஷயங்களிலும் தேர்ச்சியுடையவன் பண்டிதன் என்ற பெயருக்கு உரியவனாவான் என்ற பொருளில் வழங்குகின்றது. ஆகவே அக்காலத்தில், அதாவது பண்டிதர்கள் உலக மக்களால் மதிக்கப்பட்ட பண்டைக் காலத்தில் ஒரு பண்டிதன் என்பவன் தேச நலத்தில் பொறுப்புள்ளவனாக இருந்தான். ஜன சமூக நன்மையில் கருத்துடையவனாக இருந்தான்.ஆகையால் அவனுக்குக்கௌரவம்இருந்தது.

ஆனால், இக்காலத்தில் பண்டிதன் என்பவன் எப்படியிருக்கின்றான்? ஒரு கட்டுப் பெட்டியாக இருக்கின்றான். ஒரு கிணற்றுத் தவளையாக இருக்கின்றான். பழையபுராணக் குப்பைகளைத் தவிர வேறொன்றையும் அறியான். குப்பைகளிலும் சில நல்ல பொருள்கள் கிடைப்பதுண்டு. அவற்றைத் தேடியெடுத்துப் பயன் படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையவனாகவும் இல்லை. குப்பைகளையே உண்மையென்று கருதும் மௌட்டிகனாக இருக்கின்றான். குப்பைகளையே தெய்வீகம் என நினைக்கும் பேதையாக இருக்கின்றான்.

அன்றியும், தனது அறிவையும், முயற்சியையும், உலக நன்மைக்காக, மக்களுடைய முன்னேற்றத்திற்காக, நாட்டின் விடுதலைக்காக ஒரு சிறிதும் செலவிடுவதில்லை. அதற்குத் தகுந்த பரந்த அறிவு மில்லை, விரிந்த நோக்கமும் இல்லை.

பழைய அழுக்கு மூட்டைகளைக் கட்டிச் சுமக்கவே ஆசைப் படுகின்றான். புதிய ஆடைகளைப் புனைய விரும்புகிறானில்லை. புதியனவற்றை வெறுக்கின்றான். பழைய வைதீகத்தைத்தான் சிறந்ததாக நினைக்கிறானேயொழிய தற்காலத்து மக்களுடைய துன்பம் அகல்வதற்கு வேண்டிய வழிகளைச் சிந்திக்கின்றானில்லை.

தான் படித்த புத்தகங்களிற் கூறப்படும் விஷயங்கள் "தெய்வத் தன்மையுடையன. முன்னோர்களாற் சொல்லப்பட்டவை. ஆகையால் அவை உண்மையானவை" என்று குருட்டுத்தனமாக நம்புகிறானேயொழிய அவற்றின் உண்மைகளை யறியத் தனது மூளையை--அறிவை--ஆலோசனையை சிறிதும் செலுத்துகின்றானில்லை. தற்கால அறிஞர் கூட்டத்தில், நாகரீக வெள்ளத்தில் சேராமல் ஒதுங்கி நிற்கின்றான். ஆதலால் இக்காலத்தில் பண்டிதன் என்ற சொல் அகௌரவமுடையதாகக் கருதப்படுவதில் குற்றம் ஒன்றுமில்லை. இவ்வாறு கருதுவதில் பொய்யுமில்லை என்பதே நமது சொந்த அபிப்பிராயம்.

பக்திமான்.

அடுத்தபடியாக பக்திமான் என்பதை எடுத்துக்கொள்ளுவோம். பக்திமான் என்பவனும், முன்காலத்தில் நல்லவனாக-- ஒழுக்கமுடையவனாக--- சாதுத்தன்மையுடையவனாகக் கருதப் பட்டான். பக்தி என்பது ஒன்றை நம்பி அதைப்பின்பற்றுவது. முன் காலத்தில் இது அதாவது பக்தியென்பது முட்டாள்களின் நன்மைக்காக பாமரமக்களின் நல்லொழுக்கத்திற்காக வென்று ஏற்பட்டது. ஒன்றும் தெரியாத மக்கள்,உலக இயல்பு உணராதவர்கள், தமக்கு மேற்பட்டவர்கள் சொல்லுவதைக்கேட்டு அதன்படி நடந்துவந்தார்கள். ஒருவர் கூறிய சொற்களின்படி காரியம் செய்து வந்தார்கள். இவர்களுக்குப் பக்திமான்கள் என்ற பெயர் வந்தது.

ஆகவே, பக்தி என்பது பிறர்கூறியதைநம்பி அதன்படி நடப்பது என்பது. பிறர் கூறுவதில் நன்மையிருக்கிறதா? தீமையிருக்கிறதா? அது நம்மால் நடத்தக்கூடிய செயலா? நடத்தக்கூடாத செயலா? அவர் கூறுவதன்படி செய்வதால்பலன் உண்டா? பயன் இல்லையா? என்ற விஷயங்கள் ஆராயாமற் செய்வதுதான் பக்தி என்பது பெறப்பட்டது. நம்பிக்கைதான் பக்திக்குக்காரணம். நம்பிக்கையின் றேல் பக்தியில்லை. ஆகையால் ஒன்றை ஆராயாமல் ஒப்புக்கொள்ளுவது தான் நம்பிக்கை. அதற்குமேல் நம்பிக்கைகாரணமாக அநேக காரியங்களைச்செய்வது பக்தியாகிவிடுகின்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

சுயமரியாதைத் திதி.

வாணியம்பாடி பெரியபேட்டையில் திரு. ஜெயராம முதலியார் குமாரர் காலஞ்சென்ற திரு. இராஜரத்தின முதலியாரின் தலைவசத்தன்று மேற்படியாரின் சகோதரர் திரு. கோவிந்தராஜ முதலியார் 27-9-31 தேதியன்று மூடப் பழக்க வழக்கங்களை அறவேயொழித்து ஏழைகளுக்கும் நண்பர்களுக்கும் அறுசுவை உணவளித்து அன்னாளை நன்னாளாகக் கொண்டாடினாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குடி அரசு

ஈரோடு 1931 அக்டோபர் 4உ

அரசாங்கமும், தேசியமும்.

—:0:—

"வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்பதாக ஒரு பழமொழியுண்டு. அது போலவே இன்று பிரிட்டிஷ் அரசாங்கமும், இந்திய தேசியமும் நடைபெற்று வருகின்றன. ஏனென்று கேட்பதற்கு ஆளில்லை. இரு கூட்டமும் சேர்ந்து பாடுபட்டுழைக்கும் மக்களின் இரத்தத்தை உறுஞ்சும் சூட்சியை அறியத்தக்க புத்தி இந்திய மக்களுக்கு இல்லை. ஆனால் சீர்திருத்தத்தைப்பற்றியும், சுதந்திரத்தைப்பற்றியும், சுயராஜ்யத்தைப்பற்றியும் பேச்சுக்களுக்கும், கிளர்ச்சிகளுக்கும் மாத்திரம் குறைவில்லை. பொருளாதாரத் தறையைப்பற்றி நீலிக் கண்ணீர் விடுவதிலும், சுதேசிபிரசாரம் செய்வதிலும் மதுபானத்தைப்பற்றி மிக்கக் கவலைப்பட்டவர்கள் போல் நடித்து காங்கிரஸ் ஒருபுறம் பகிஷ்காரமும், மறியலும் அரசாங்கம் ஒரு புறம் பிரசாரமும் செய்வதாகச்செய்யும் ஆர்ப்பாட்டங்களிலும் குறைவில்லை.

அதே சமயத்தில் "பொருளாதார நெருக்கடியை சரிபடுத்த" சர்க்காரார் புதிய புதிய வரி போடுவதிலும் காங்கிரஸ் மக்களுக்கு அதிகச்செலவை உண்டுபண்ண கதர்த்தொழிலை விர்த்தி செய்வதிலும் குறைவில்லை. இந்த இரண்டு காரியங்களிலும் தேசத்தில் பொருளாதாரக் கஷ்டமும், அடிமைத்தன்மையும், அறியாமையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றதே யொழிய வேறில்லை.

ஆனால் இந்தியாவிலுள்ள இந்திய மக்கள் நிலைமையோ- இவைகளுக்குக் காரணம் என்ன? இக்கஷ்டங்களிலிருந்து எப்படி விடுதலைபெறுவது? என்கின்ற உணர்ச்சியே சிறிதுமின்றி, தெய்வத்தின் மீது பழியைப்போட்டுவிட்டு, காந்தி ஜயந்தி பண்டிகை கொண்டாடுகின்ற வேலையில் முனைந்து நிற்க பிரசாரம் செய்யப்படுகின்றார்கள். இந்த முயற்சிகளானது இந்தியாவில் 20, 30 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்ததாகக் காணப்படும் நிலைமையிலேயே மக்களை இருத்தி வைக்கும் முயற்சியாகக் காணப்படுவதல்லாமல் மற்றபடி அதில் வேறு எவ்வித பரிகாரமோ, விடுதலையோ முற்போக்கோ இருப்பதாகக் காண முடியவில்லை.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது என்றால் அது யாருக்கு ஏற்பட்டிருக்கின்றது? எதனால் ஏற்பட்டது? என்கின்றதான இரண்டு விஷயத்தையும் கவனித்து யாருக்கு எவ்வித சௌகரியம் செய்யவேண்டும்? எப்படி செய்யவேண்டும்? என்பதைக் கவனிக்கவேண்டியது நீதியையும் பொறுப்பையும் உணர்ந்த—நல்லெண்ணமுடைய ஒரு அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்றைய நிலைமையில் நம் தலையில் சுமத்தப்பட்டுள்ள அரசாங்கமோ சிறிதாவது நியாயத்தையும், பொறுப்பையும் லட்சியம் செய்யாமல் "வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம்" என்கின்ற பழமொழிப்படி ஜனங்களுக்கு அவர்களது வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக இன்னமும் அதிகமான பொருளாதாரக் கஷ்டத்தைக் கொடுக்கும் மாதிரியில் வரியை அதிகமாக உயர்த்துகின்ற வேலையையே பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்குச் செய்யப்படும் வேலை என்று சொல்லிக்கொண்டு அந்தப்படியே செய்து வருகின்றது.

ஆகவே, அரசாங்கத்தார் இப்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி இருக்கின்றது என்று நினைத்திருப்பதெல்லாம் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் இருப்பதைத்தான் பொருளாதார நெருக்கடி என்று கருதி இருக்கின்றார்களேயொழிய, குடி ஜனங்கள் வரிகொடுக்க முடியாமல், வாழமுடியாமல் இருக்கின்ற நிலைமையை ஒரு நாளும் பொருளாதார நெருக்கடி என்று கருதுவதாய்த் தெரியவில்லை.

சர்க்காரார் உத்தியோகஸ்தர்களுக்குச் சாதாரணமாய் 20 வருஷத்திற்கு முன் இருந்த சம்பளங்கள் இன்று அநேக விஷயங்களில் ஒன்றுக்கு ஒன்றரை, இரண்டு ஆகவும், சிலருக்கு ஒன்றுக்கு மூன்றாகவும் ஏற்பட்டிருக்கின்றன. சம்பளங்கள் மாத்திரமல்லாமல் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையும், ஒன்றுக்கு இரண்டாய், மூன்றாய் சில உத்தியோகங்கள் நான்குபங்கதிகமாகவும் அதிகப்படுத்தப்பட்டு விட்டன.

உதாரணமாக ஒரு போலீசுகாரனுக்கு மாதம் 7 ரூபாய்முதல் 8-ரூபாய், ஒரு எட்டுக்கு 14 முதல் 25 ரூபாய், ஒரு இன்ஸ்பெக்டருக்கு 70 முதல் 150 ரூபாய் இருந்ததானது, இப்போது போலீஸ்காரனுக்கு 18 முதல் 22 ரூபாயும், ஒரு எட்டுக்கு 25 முதல் 35 ரூபாயும், மத்தியில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் அதிகமாகி 60 முதல் 175 ரூபாயும், இன்ஸ்பெக்டருக்கு 175 முதல் 300 ரூபாய்வரையும் ஏற்படுத்தப்பட்டு போலீசுகாரர்கள் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப் பட்டுவிட்டதென்றால் சாதாரணமாக இந்த 20 வருஷத்திற்கு முன் இருந்த நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் எவ்வளவு பங்கு உயர்ந்திருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள். இது கீழ்தர்ஜா நிலைமைக்கு உதாரணம் கூறப்பட்டது.

இனி மேல் தர்ஜா நிலைமை என்பதைப் பற்றி கவனிப்போமானால் சென்னை அரசாங்க நிர்வாகசபை 5300 ரூபாய் சம்பளமுள்ள இரண்டு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்ததானது இப்போது 5000 சம்பளமுள்ள ஏழு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்படுகின்றது என்றால் எவ்வளவு விகிதாச்சாரம் அதிகமாக மக்கள்மீது அரசாங்க பளுவு சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதை நினைத்துப் பாருங்கள். இனி நீதிவழங்கும் இலாகா நிலைமையைச் சற்று கவனித்தோமேயானால் 3000 ரூபாய்ச் சம்பளமுள்ள 5 ஹைகோர்ட்டு ஜட்ஜுகளால் நடைபெற்று வந்த நீதி நிர்வாகம் இன்று 4000 ரூ. சம்பளமுள்ள 15 ஜட்ஜுகளால் ஹைகோர்ட்டு நீதி நடைபெற்று வருகின்றது. இந்த விகிதாச்சாரத்தை அனுசரித்தே இந்திய இராணுவச்செலவும் 22 கோடி ரூபாயில் இருந்தது 60 கோடிவரை உயர்த்தப்பட வேண்டிய அளவுக்கு ஏறிவிட்டது. இந்தக் காரியங்கள் அவ்வளவும் தேசியத்தின் பேராலும், நல்ல அரசாட்சியின் பேராலும் உயர்த்தப்பட்டதே யொழிய வேறில்லை என்பதை முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, தயவு செய்து, மேலே படியுங்கள். ஆகவே. நல்ல அரசாட்சியும், தேசியமும் மக்களின் நன்மைக்காக அன்றே ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு இந்த நாட்டுக்கு இன்று இந்த நிலைமையைக் கொண்டு வந்து விடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கம் இந்த அளவுக்கு தலைகனத்து, சிறிதும் ஈவு இரக்கமில்லாமல் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும்படியானதாக ஏற்பட்டதற்கு முக்கியகாரணம் இந்திய தேசியம் என்கின்ற ஒரு பெரிய பித்தலாட்டமான சாதனமேயாகும். இந்தப் பித்தலாட்டமான தேசியம் இவ்வளவு அட்டூழியங்களைச் செய்ய அனுகூலமாயிருந்ததற்குக் காரணமெல்லாம் நமது இந்தியமக்களின் முட்டாள் தனமும், வயிற்றுப் பிழைப்புக்கு எதையும் விற்கத் தயாராய் இருந்த மானமற்றத் தனமுமேயாகும்.

இதை இன்னமும் விவரித்துச் சொல்லவேண்டுமென்பதாக நமது "குடி அரசு" வாசகர்கள் ஆசைப்படமாட்டார்கள் என்றே கருதுகின்றோம். ஆனாலும் இரண்டொருவருக்காவது இரண்டொரு விஷயங்களாவது விளங்க வேண்டி இருக்குமானால் நமது மாகாணத்தின் தேசியத்தைப் பற்றி மட்டும் சிறிது ஜாடைகாட்டி விட்டு பிறகு மேலே போகலாம் என்று கருதுகின்றோம்.

அதாவது இந்திய தேசிய காங்கிரசுக்கு நமது மாகாணத்தில் மாத்திரம் தலைவரானவர்கள், காரியதரிசி ஆனவர்கள் ஆகியவர்களைப் பற்றியும், அவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நலனைப் பற்றியும், அவர்களது நாணயம், தேசபக்தி, தேசிய கொள்கை ஆகியவைகளைப் பற்றியும் சற்று யோசித்துப் பாருங்கள்.

திருவாளர்கள் சர். சி. சங்கரநாயர் முதல் சர்மணி அய்யர். எஸ். சீனிவாச அய்யங்கார், சி. விஜயராகவாச்சாரியார். சி. பி. ராமசாமி அய்யர், எ. ரங்கசாமி அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி அய்யர் முதலியவர்கள் ஆவார்கள். இன்றைய தினமும் இந்தமாதிரி ஆட்களுடைய யோக்கியதை சற்று வெளியாகி விட்டதால் இதே கூட்டத்தில் உள்ள ஆட்களே சற்று வேறு வேஷம் போட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அதாவது சிலபேர் "வெள்ளை வேஷ்டி கட்டிக் கொண்டு பிச்சைக்குப் போனால் லக்ஷியம் செய்யமாட்டார்கள்' என்று கருதி 'காவிவேஷ்டிகட்டிக்கொண்டுபிச்சைக்குப் போவது' போல் சந்நியாசி, துறவி என்கின்ற பேரால் அதாவது வக்கீல் உத்தியோகம் செய்வதை விட்டு விட்டவர்கள் என்கின்ற பெயரால் அதே தேசியத்தை அதே முறையில் அதே கூட்டத்தார்களே இன்றும் நடத்

றுகின்றார்களே யொழிய வேறு எந்த விதத்திலும் நாணயமுடையவர்களோ, யோக்கியமும், நல்ல எண்ணமும் உடையவர்களோ இந்த வேலையில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிவிட முடியுமா? உதாரணமாக, திரு. காந்திக்கு திரு. ஏ. இரங்கசாமி அய்யங்கார் அரசியல் காரியதரிசியாகவும், திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் சமூதாயகாரியதரிசியாகவும் இருக்கிறார்கள் என்பதும், திரு. எஸ். சத்தியமூர்த்திதான் காங்கிரஸ் தலைவராகவும் இருக்கிறார் என்பதுமே போதுமானதாகும்.

மற்ற மாகாணக் காரர்களின் யோக்கியதை தமிழ்நாட்டு தேசியவாதிகளை விட உயர்ந்திருக்கும் என்று கருதி நாம் அவர்களைப் பற்றி எழுதாமல் விட்டு விட்டதாக யாரும் கருதவேண்டியதில்லை. தேசியம் என்கின்ற அச்சில் எந்த மாகாணத்து மக்களை உருக்கி ஊற்றினாலும் ஒரேமாதிரி உருவந்தான் தோன்றும். இந்த மாகாணத்தில் அதற்கென்றே முன்னணியில் நிற்க ஒரு தனி ஜாதியே ஏற்பட்டு விட்டதால், அது சற்று வேறு மாதிரியாகக் காணப்பட இடமுண்டாகின்றது. என்றாலும் எங்கும் பொதுவில் வக்கீல் கூட்டம் தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

இந்த மாதிரியான தேசியமானது (வக்கீல் கூட்டமானது) எப்படிப்பட்ட அரசாங்கத்துடன் தேசிய வியாபாரம் செய்ய ஆசைப் பட்டதென்று பார்ப்போமேயானால், வக்கீல் கூட்டத்தின் மனப்பான்மையின் தத்துவத்திற்குச் சிறிதும் பின் வாங்காததான (வியாபாரக் கூட்டத்தினரான) வெள்ளைக்காரர்களின் அரசாங்கத்தில் முட்ட ஆரம்பித்தது. இரண்டு கூட்டங்களும் ஒன்றுக் கொன்று இளைக்காததான தந்திரமும், சூக்ஷியு முடையதானதால் இரண்டும் முட்டிக் கொள்ளும் போது இந்திய முடப்பாமர ஜனங்கள் மத்தியில் சிக்கி, கச கச வென்று நசுங்க வேண்டியவர்களாகி விட்டார்கள். மேற்கண்ட இந்த இரு வர்க்கத்தினர்களின் சுயநல வியாபாரமே தான் இன்றும் 'நல்ல ஆட்சி'யின் பேராலும், 'தேசியத்தின்' பேராலும் நடக்கின்றது என்பதை யாரும் மறந்து விடாதீர்கள்.

வாசகர்களே! இது மாத்திரமல்லாமல், இன்று சீமையில் நடக்கும் வட்டமேஜை மகாநாடு என்பதும் சர்க்காரும் (வெள்ளைக்காரரும்), தேசியமும் (வக்கீல்களும்) சேர்ந்தது. இந்திய மக்களை ஆலையில் கொடுத்து நசுக்கிப்பிழியும் படியான தன்மை பொருந்திய அளவு கொடுமை கொண்ட ஒரு சதியாலோசனை என்பதைவிட மற்றபடி அதற்கு வேறு ஏதாவது பெயர் கொடுக்க முடியுமா? என்பதை யோசித்துப்பாருங்கள்.

இந்தியாவின் முப்பத்தைந்து கோடி ஜனங்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டு சீமைக்குச் சென்றிருக்கும் திரு. காந்தி அவர்கள் தன் தலையில் சுமந்து கொண்டு போயிருக்கும் சுயராஜ்யத் திட்டம் வருணாச்சிரமக் கொள்கையும், முதலாளி ஆதிக்கக் கொள்கையும் கொண்டதான ஒரு பெரிய மூட்டையா? அல்லவா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அவர் விஷயம் அப்படியிருக்க, மற்றப்பிரதிநிதிகளின் யோக்கியதைகள் தான் என்ன? என்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். ஏழைமக்களுக்கும், பாடுபட்டு உழைத்துவிட்டு, பட்டினி கிடக்கும் மக்களுக்கும் பிரதிநிதியாக யாராவது போயிருக்கின்றார்களா? என்பதைச்சற்று நடு நிலைமையில் நல்ல புத்தியோடிருந்து யோசித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

ஒரு சமயம் திரு. காந்தி அவர்கள் 'தன்னை அடிக்கடி தான் "இந்தியாவில் பாடுபட்டு உழைத்துப் பட்டினிகிடக்கும் கிராமத்து ஏழை மக்களின் பிரதிநிதி" என்று சொல்லிக்கொள்ளுகின்றாரே என்றுகருதி அவரை ஏழை மக்கள்ளின் உண்மையானபிரதிநிதி என்று கருதியிருப்பீர்களேயானால் நீங்கள்ஒரு முட்டாள்களேயாவீர்கள் என்றுநாம் சொல்லுவதற்காக யாரும் அவசரப்பட்டு, மனவருத்தமடையக் கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஏனெனில், திரு காந்தியவர்கள் தன்னைஎந்த விதத்தில் ஏழை மக்கள்பிரதிநிதி-கிராம வாசிகள்பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார் என்பதைக் கவனித்தால் இதன் உண்மை விளங்கிவிடும்.

அதாவது "ஏழை மக்கள் கிராமத்தில் ஆடுமாடு மேய்த்து, நெய், பால், மோர் விற்றும், செருப்புத் தைத்தும் வாழ வேண்டியது. அவர்களது கையில் காசு சேரும் படியான வேலை எதுவும் செய்யக்கூடாது. மற்றும் பம்பாயில் முதலாளிகளைப்பார்த்துபொறாமைப்படக்கூடாது. அவர்களைப்போல பணக்காரர்கள் ஆவதற்கு எண்ணவும் கூடாது" என்பதான கொள்கையுடன் தான் கிராமத்து ஏழை மக்களின் பிரதிநிதி என்று அவரே ஒரு தடவைக்கு மேலாகவே சொல்லி இருக்கிறார் என்பதை மறந்து விடாதீர்கள்.

அதாவது, வருணாச்சிரமக்கொள்கைபடி மக்கள் இருக்கவேண்டிய அளவுக்கு சுயராஜ்யம் கொண்டுவரப்போயிருக்கும் பிரதிநிதியே யாவார்.

மற்றபடி, வட்டமேஜை மகாநாட்டின் பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகளான திருவாளர்கள் இராமசாமி முதலியார், பன்னீர் செல்வம் முதலியவர்களின் யோக்கியதையையும் நாம் வெளியில் சொல்லித் தான் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதென்பதில்லை. ஏனெனில், திரு. இராமசாமி முதலியார் ஜஸ்டிஸ் கட்சி என்னும் ஒரு தேசியக் கட்சிப் பிரதிநிதியாவார். ஆதலால், ஜஸ்டிஸ் கட்சியின் தேசியக் கொள்கை என்ன என்று தெரிந்தவர்களுக்கு திரு. முதலியாரின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி தெரிவிக்க வேண்டியதில்லை. திரு பன்னீர் செல்வம் அவர்களோ இந்திய கிறிஸ்துவர் பிரதிநிதி ஆவார். அவருடைய மத சமுதாயக் கொள்கைகள் தெரிந்தவர்களுக்கு அவரது பிரதிநிதித்துவத்தைப்பற்றியும் நாம்தெரிவிக்க வேண்டியதில்லை.

மற்றும் சென்னைமாகாண பார்ப்பனப்பிரதிநிதிகளுக்காக தலையங்கத்தை வளர்க்க மனமில்லாததால் விட்டு விட்டோம்.

பெண்கள்சார்பாகவோ, திரு மதி ராதாபாய் சுப்பராயன் அம்மாள் நமது பிரதிநிதியாவர். அந்தம்மாள் ஒரு ஜெமீன்தாரணியாவார். பெண்களுக்குஎல்லாபிரதிநிதித்துவமும், மந்திரி வேலை வரைபதவியும் கிடைக்க வேண்டு மென்பதற்கு எவ்வளவு வேண்டுமானாலும் வஞ்சக மில்லாமல் வாதாடுவார்கள். ஆனால், புருஷனிடம் அடியும் உதையும் பட்டுக் கொண்டு, தற்கொலை பண்ணிக் கொள்ளவும் சௌகரியம் இல்லாமல் கஷ்டப்படும் பெண்களைப் பற்றிய கதை அந்த அம்மையாருக்கு சிறிதுமே தெரியாது. ஆகவே, அந்தம்மாளிடம் பெண்களுக்குமுக்கியமாக எவ்வித விடுதலை வேண்டுமோ அந்தக்காரியம் மத்திரம் எதிர்பார்க்க முடியாது.

இவை இப்படி இருக்க, மற்றபடி வட்டமேஜை மகாநாட்டில் நமது சர்க்காரார்பிரதிநிதித்துவம் எவ்வளவு யோக்கியதை உடையது என்று பார்த்தால் ஒரு வரியில் முடிவு கண்டு விடலாம். அதாவது 'இந்தியாவை இந்து சமஸ்தான மன்னர்களும், இந்திய வக்கீல்களும, வியாபாரிகளும் சேர்ந்து ஆட்சி புரிய வேண்டியதாகும்' என்கின்ற கொள்கையேதான் சர்க்காராருடையகொள்கையாகும். மற்றபடிநமது மாகாண தீண்டாதவர்கள் பிரதிநிதித்துவத்தைப்பற்றி பேசுவதென்றாலோ நமதுபிரதிநிதியாய்சென்றிருப்பவர் தங்களுக்குஎன்ன வேண்டும்? என்பதையே சரியாய்உணராதவர்கள் ஆவார்களா என்பது சந்தேகம்.

ஆகவே இப்படிப்பட்டவட்டமேஜைமகாநாட்டை மேலேசொன்னபடி 35கோடி மக்களைவதைத்து தாங்கள்வாழநினைத்திருக்கும் பலவிதசுயநலஎண்ணங்களைக் கொண்ட ஒருசிறு கூட்டத்தாரின்சதியாலோசனை மகாநாடு என்பதைத்தவிர வேறு என்ன சொல்ல முடியும், என்று மறுபடியும் கேட்கின்றோம்.

சுதந்திரம், சுயராஜியம், பொருளாதாரக்கஷ்டம் என்றுகூப்பாடு போட்டுக்கொண்டு இருக்கும் இந்தகாலத்திலேயே அதுவும் அக்கூச்சல்களுக்குமத்தியிலேயே இந்தியாவில் 'பொருளாதார நெருக்கடியை குறைக்க' என்றுபுதியவரிபோடுவதினுடையவும், அடக்குமுறை சட்டங்கள் ஏற்படுத்துவதினுடையவும் கொடுமையை நினைத்தால்யாருக்குத்தான்வயிறு பற்றிஎரியாது? அரசாங்கம்என்பது இப்படித்தான்இருக்கும்என்று சொல்லுவதானால், தேசியம்என்பது இப்படித்தான்இருக்கும்என்று சொல்லுவதானால்மக்களுக்கு ஒரு அரசாங்கமோ, தேசியமோ அடியோடு வேண்டியதில்லை என்கின்றதான நிலைமையே மேலென்று சொல்லுவோம். தேசம் தன்னரசு நாடாகி, எங்கு பார்த்தாலும் கலகமும் கொள்ளையும் நடக்கும் நிலைமை வந்தாலும் இந்திய மக்கள் இன்று அரசாங்கத்தாலும், தேசியத்தாலும் கஷ்டப்படுகின்ற இம்சையில் இருந்து 100-க்கு 50பங்கு மேலாக வேகுறைவாகத்தான் கஷ்டப்படுவார்களேயொழிய, இதைவிட ஒரு சிறுகடுகளவும் அதிகமாய்க்கஷ்டப்படமுடியாதென்று தைரியமாய்ச்சொல்லுவோம்.

அப்படிஏதாவது, யாராவது அந்தசமயம் இன்றையநிலைமையைவிட சற்று அதிகமாகக்கஷ்டப்படக்கூடியதாகும்என்றுசொல்லக்கூடுமானால், அப்படிக்கஷ்டப்படும் கூட்டம் வெகு சிறிய

கூட்டமாகவும், அதுவும் இன்று மக்களை வதைத்துக் கொடுமைப்படுத்தி, சோம்பேரியாய் வாழும் பார்ப்பன-வக்கீல்- உத்தியோகம் ஆகிய கூட்டமும், பாட்டிற்குத் தகுந்த கூலிகூட கொடுக்காமல் ஏழைகளை ஏமாற்றி வாழும் முதலாளி, ஜமீன்தாரர் கூட்டமும் தான் சின்னாபின்னப்படுமே தவிர, மற்றபடி 100-க்கு 90 பேர் கொண்ட ஏழை மக்களுக்கு ஒரு கஷ்டமுமே வந்துவிடாது.

ஆகவே, இவற்றிலிருந்து அரசாங்கமும், தேசீயமும் சோம்பேரிகளையும், செல்வவான்களையும் காப்பாற்றுவதற்கேற்பட்டதேயொழிய ஒரு நாளும் ஏழை மக்களைக் காப்பாற்ற ஏற்பட்டதல்ல என்றே உரக்கக் கூறுவோம்.

ஏழை மக்கள் கூப்பாடு வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காகவே தான், அதாவது எப்படி அடித்தாலும் அழுகக்கூடாது என்பதற்காக மேலும் மேலும் அடிப்பது போலவே இன்று இந்திய சட்டசபையில் பத்திரிகைச் சட்டம் கொண்டு வந்தாய் விட்டது. இச்சட்டம் கொண்டு வரப் பட்டதற்கும், அமுலில் வரப் போவதற்கும் திரு. காந்தியும், தேசீயமுமே நூற்றிற்கு 51 பாகத்திற்கு மேலாகவே பொறுப்பாளி யாவார்களென்று சொல்லுவோம்.

அடித்தவனை தண்டிக்கவோ, கொலை செய்தவனை கொலை செய்யவோ கூடாதென்று நாம் எப்பொழுதும் சொல்லவாயில்லை. ஏனெனில், தண்டனையடையத் தயாராயிருப்பவன் தான், பெரிதும் அடிக்க வருவான். சாகத் துணிந்தவன் தான் மற்றவனைக் கொல்ல வருவான். ஆகையால் அதில் தப்பித்துக் கொள்ள ஆசைப்படுபவர்களை விட்டுவிடும்படி நாம் சொல்ல வரவில்லை. அதற்காக ஒரு மனிதன் தனது அபிப்பிராயத்தைக்கூட வெளியில் எடுத்துச் சொல்லக் கூடாது என்று சட்டம் செய்வதானால் இது எப்படி நாகரீகமான-சுயேச்சைக்கு இடமளிப்பதான ஆக்ஷி என்று சொல்ல முடியும்?

ஒவ்வொரு 'தேசீயப்பத்திரிகை'யும், ஒவ்வொரு'தேசீயவாதி' யும் அனேகமாய் இவ்விஷயத்தில் வழவழவென்றே பேசி சர்க்காருக்கு தைரியத்தையும் ஆக்கத்தையும் அளித்துவிட்டார்கள். 'நான் ஓயாமல் அழுகின்றேன். நீ நோகாமல் அடி' யென்பது போலவே நடந்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்களைக்காப்பாற்றிக்கொள்ளப்பேசினார்களேயல்லாமல் வேறில்லை. அதாவது 'ஒரு சட்டம் வேண்டியது தான். ஆனால்' என்றுதான் தங்கள் ஆட்சேபனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். கொலை செய்தவனைத்தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருக்கின்றது. கொலைக்குத் தூண்டியவனையும் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருக்கின்றது.

அப்படியிருக்க, அடியோடு பத்திரிகை சுதந்திரத்தையே அழிக்கத்தக்க சட்டம் எதற்காக செய்யப் பட வேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை. என்ன குறைந்தாலும் இந்தியா தேசத்தில் நாள் 1-க்கு நூற்றுக்கணக்கான கொலைகளுக்குக்குறையாமல் மனிதனைமனிதன் வெட்டிக்கொண்டோ, குத்திக்கொண்டோ, சுட்டுக்கொண்டோ தான் கொலைகள் நடைபெறுகின்றன. இதற்காக உலகத்தில் கத்தி இல்லாமல்போய்விட்டதா? துப்பாக்கி இல்லாமல் போய்விட்டதா? கைகள் இல்லாமல் போய்விட்டதா? என்று கேட்கின்றோம். கோபப்பட்டு ஆத்திரப்பட்டு துவேஷப்பட்டு குத்துவதும், வெட்டுவதும், சுடுவதும் கோழைத்தனமென்பதையும், முட்டாள் தனம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். அதற்காக மக்களுக்கு உண்மை விளங்காமலும், விஷயஞானமேற்படாமலும் இருக்கும்படி செய்வதா? என்பது தான் நமது கேள்வி.

ஆகவே, இந்த சமயத்தில், அதாவது இந்தியாவுக்கு 'சுதந்திரம்' வழங்கப்போகும் சமயத்தில், பொருளாதாரக்குறை நீங்கப் போகும் சமயத்தில், அதுவும் ''அஹிம்சாதர்மமூர்த்தியாகிய மகாத்மா' காந்தி உலகத்தை அஹிம்சா தர்மத்தில் திருப்பி அஹிம்சையின் மூலமே ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் ஏழைகளுக்கு வேண்டிய சுதந்திரம் வாங்கிவர சீமைக்குப்போயிருக்கும்'' சமயத்தில், கதரின் மூலம் மணிக்கு ஒரு தம்படி வரும்படியான ''பொருளாதாரக் கஷ்டத்தை நீக்க''விருக்கும் சமயத்தில் இதுவரையில்லாத புதியவரி உயர்வும், இதுவரையில்லாத புதிய அடக்கு முறை சட்டமும் ஏற்படுவது என்றால், இந்த தேசீயத்திலும், இந்த சர்க்காரிலும் ஏதாவது நாணயமோ, யோக்கியமோ இருக்கமுடியுமா? என்றுயோசித்துப்பாருங்கள். எனவே, ஜனங்களின் முட்டாள் தனத்தால் தேசீயம் இவ்வளவு அயோக்கியத்தனமாய் நடைபெறுவதும், தேசீயத்தின் அயோக்கியதனத்தால் அரசாங்கம் இவ்வளவு அக்கிரமமாகவும், கொடுமையாகவும் நடைபெற வேண்டியதானதுமான காரியங்களை நினைத்துப்பார்த்தால் இவை நமக்கு அதிசயமாய்த்தோன்றவில்லை.

ஏனெனில், மக்களின் முட்டாள்தனம் நீங்கும் போதுதான் இந்தக்கொடுமையும், அக்கிரமமும் எல்லாம் சரிபட முடியும். அதுவரை யார் என்ன பாடுபட்டாலும் ஒரு காரியமும் சாத்தியப்பட மாட்டாது. இப்படியே தான் மேலும் மேலும் நடந்து கொண்டே இருக்கும்.

ஆதலால் இன்று மக்களின் முட்டாள்தனத்தையும், மூடநம்பிக்கையையும் ஒழிக்கும் வேலை தான் தேசீய வேலையாகவும், நல்ல அரசாட்சி ஏற்படுத்தும் வேலையாகவும் கொள்ள வேண்டியதாகும் என்பதை பொது ஜனங்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் தெரிவித்துக் கொள்ளவே இதை எழுதினோம்.

பெண்களுக்குச் சொத்துரிமை.

மைசூர்.

மைசூர் அரசாங்கத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கச்சட்டம்.

1931-ஆம் அக்டோபர் மாதம 22 தேதி நடைபெறவிருக்கும சட்டசபையில இந்து லா என்னும் இந்துக்கள் சட்டசம்பந்தமான விஷயங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். கடந்த 2 சட்டசபைகளில மேற்படி விஷயங்கள சம்பந்தமான பொதுக் கொள்கைகள் யாவும் ஒப்புக்கொள்ளப்பட்டாய் விட்டன. அதின்மீது ஏற்பாடுசெய்திருக்கும் திட்டங்கள வரப்போகும சட்டசபையின் விவாதத்துக்குக்கொண்டு வரப்படும்.

அவையாவன:—பெண்களுக்குத் தாங்கள் பெண்களாகப்பிறந்தகாரணத்தாலோ, அல்லது அவர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்பதற்கு மதசம்பந்தமான ஆதாரங்கள இல்லை என்கின்ற காரணத்தாலோ அவர்களது வார்சு சொத்துரிமை மறுக்கப் படக்கூடாது.

ஒரு பாகம் பிரியாத குடும்பத்தில் உள்ள ஒருவர்தான் சுயார்ஜிதமாக சம்பாதித்து வைத்திருக்கும் சொத்திலும் பெண் சந்ததிகளுக்கு உரிமை உண்டு.

ஒவ்வொரு விதவைக்கும் தானாகவே தத்து எடுத்துக்கொள்ள உரிமையுண்டு. புருஷன் கண்டிப்பாய் தத்து எடுத்துக் கொள்ளக்கூடாது என்றுஏற்பாடு செய்திருந்தால் விதவைக்குத்தத்து எடுத்துக்கொள்ள உரிமை இல்லை.

பெண் பிள்ளைகளுக்கு இப்போது கிடைத்துவரும் வார்சு உரிமைகளிலும்கூட சொத்துக்களின் வரும்படிகளை அனுபவிக்க மாத்திரம் உரிமை இருக்கின்றதே தவிர, மற்றபடி அவர்கள் அதைத் தங்கள் இஷ்டப்படி சர்வ சுதந்திரமாய் அனுபோகிக்கவும், வினியோகிக்கவும் உரிமை இல்லாமல் இருக்கின்றார்கள்; ஆதலால் இந்தக்குறையும் நீங்கும்படியாக அதாவது அவர்களுக்குக்கிடைக்கும் வார்சு உரிமை சொத்துக்களை தங்கள் இஷ்டப்படி சர்வசுதந்திரமாய் அனுபவிக்கவும், வினியோகிக்கவும் இந்தப் புதிய சட்டத்தில அனுமதிக்கப்படுகின்றது.

பாகம் பிரியாத குடும்பத்தில் கணவன் இறந்துவிட்டால் பெண்ஜாதிக்குக்குழந்தை இருந்தாலும், இல்லாவிட்டாலும் குடும்பசொத்தில கணவனுக்குள்ளபாகம் சர்வசுதந்திரமாய்பெண்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். குடும்ப சொத்துக்கள் பலவழிகளில் துர்வினியோகம் செய்யப்பட்டக் காலங்களிலும் அச் சொத்துகளின் மீது பெண்களுக்கு ஜீவனாம்சத்திற்கு உரிமையுண்டு என்பதாகும்.

இந்தியா கவர்ன்மெண்டின் புதிய வரிகள்.

28—9—31 தேதி மாலை 5 மணிக்கு இந்தியா சட்ட சபையில் கனம் ஜார்ஜ் ஷுஸ்டர் ஆஜர் செய்த உபதிட்டத்தில் அடங்கியுள்ள புதியவரிப் பிரேரணைகளின் விவரமாவது:—

1. பருத்தியின்மீது பவுண்டுக்கு 6 பைசா இறக்குமதி வரி.
2. இயந்திரங்களின்மீது 10% இறக்குமதி வரி.
3. சாயவகைகளின் மீது 10% இறக்குமதி வரி.
4. பழுப்புச் சர்க்கரை இறக்குமதி வரி அந்தர் 1-க்கு ரூ 6—12

விருந்து ரூ. 7—4—க்கு உயர்வு.

5. பூட்ஸ், அரைபூட்ஸ் இவைகளின்மீது மார்க்கெட் விலைப்படி இறக்குமதிவரி 20%லிருந்து மார்க்கெட் விலைப்படி 20% அல்லது ஜதைக்கு 4 அணாவில் எது அதிகமாக இருக்கிறதோ அந்தவரி.

6. செயற்கைப்பட்டுநூலுக்கு மார்க்கெட் விலையின்மேல் 5% இறக்குமதி வரி. அதாவது 10% லிருந்து 15%ஆக உயர்வு.

7. செயற்கைப்பட்டுப்பீஸ்கள், கற்பூரம், எலெக்ட்ரிக் பல்புகள் இவைகளின்மீது விதிக்கப்பட்டு வந்த 20% இறக்குமதி வரி மார்க்கெட் விலையின்மேல் 40% ஆக உயர்த்தப்படும்.

8. கடைசி வரிச்சட்டத்தின்படி விதிக்கப்பட்ட சர் சார்ஜ உள்பட இறக்குமதியாகும் எல்லா சாமான்களின்மீதும இப்பொழுது இருந்துவரும் விகிதங்களுடன் கால பாகம் சர் சார்ஜும் பருத்தி, இயந்திரங்கள், சாயவகைகள்மீதுள்ளவை தவிர புதிய வரிகளின்மீதும் கால் பங்கு சர்சார்ஜும்.

9. ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு 1999 ரூபாய்க்குட்பட்ட வருமானங்களுக்கு இந்த வரவு செலவு வருஷத்தில் ரூபாய்க்கு 2 தம்படி வீதமும், அடுத்த வரவு செலவு வருஷத்தில்4 தம்படி வீதமும் வரி.

10, இப்பொழுதுள்ள வருமான வரியில் அரைக்கால் பங்கு இந்த வரவு செலவு வருஷத்திலும் அடுத்தவரவுசெலவு,வருஷத்தில் கால பங்கும் சர் சார்ஜ (உயர்வு.)

11. உப்பு உள்பட எல்லா கலால் வரிகளில் கால் பங்கு சர் சார்ஜ் (உயர்வு.)

12. இப்பொழுதுள்ளஉள்நாட்டுத்தபால் கட்டணங்கள் 100க்கு 50 வீதம உயர்த்தப்படும். அதாவது தபால்களுக்கு ஒன்னரை அணா வீதமும கார்டுகளுக்கு முக்கால் அணா வீதமும் கட்டணம் வசூலிக்கப்படும.

2. உப்பு உள்பட கலால் வரி உயர்வுகள் செப்டம்பர் மாதம் 30-ந் தேதி காலையிலிருந்து அநுஷ்டானத்தில் வரும். தபால் கட்டணங்களில் உயர்வு இனிமேல் சபையுடன் கூடினகவர்னர் ஜெனரலால் நியமிக்கப்படக்கூடியதேதியிலிருந்து அநுஷ்டானத்தில வரும்.

ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபாலிடியில்இதுவரை 20 கவுன்சிலர்கள் இருந்து வந்ததை மாற்றி புதிபஜன கணிதப்படி 24 கவுன்சிலர்கள் சாங்ஷன் செய்யப்பட்டுவிட்டது

இந்த 24 கவுன்சிலர்கள் மகமதியர்களுக்கு 2ம் கிறிஸ்தவர்களுக்கு 1ம் ஆதிதிராவிடர்களுக்கு 1ம் பெண்களுக்கு 1ம் ஆக 5 ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்பட்டு பாசாகி 19 ஸ்தானங்களுக்கும் 19 வார்டுகள் பிரிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு சர்க்காரார் உத்திரவு வந்திருக்கின்றது அநேகமாய் நவம்பர் மாதத்திலேயே எலக்ஷன்கள் நடக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

"காங்கிரஸ் மீதும் காந்தியின் மீதும்" நம்பிக்கையில்லை.

காந்தி கூறியது தவறு.

—:0:—

சீமைக்குத் தந்தி.

ஆதிதிராவிட சபைத்தலைவர் ராவ்சாயப் எம் சி. மதுரைபிள்ளை எழுதுவதாவது:- ஆதிதிராவிடர்களுக்குத்தனிபிரதிநிதித்துவமும் பாதுகாப்பும் வேண்டியதில்லை என்றும் காங்கிரசே ஆதிதிராவிடர்களின் நன்மையை கவனித்துக்கொள்ளும் என்றும் வட்டமேஜை மகாநாட்டில் திரு காந்தி தெரிவித்து இருப்பதாக தெரிகின்றது. இது தப்பான அபிப்பிராயமாகும். ஆதிதிராவிடர்களுக்கு திரு. காந்திமீதும் காங்கிரஸ் மீதும் நம்பிக்கை கிடையாது. ஆதலால் ஆதிதிராவிட பிரதிநிதிக்கு அடியிலகண்டபடி தந்தி கொடுத்திருக்கிறோம்.

"மாகாண சட்டசபைகளிலும் மத்திய சட்டசபைகளிலும் தனிப்பிரதிநிதிததுவமும்பாதுகாப்பும் அவசியமாகும். ஆதலால் அதை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்" என்பதாக தந்தி பேசப்பட்டிருக்கிறது.

(9ம பக்கத்தொடர்ச்சி)

றது. ஆகையால் ஆராயாமல் இருப்பதை முட்டாள்தனம் என்று கூறும்போது ஆராயாமல் நம்புவதைச்சந்தேகமில்லாமல் 'முழுமுட்டாள்தனம்' என்று சொல்லலாம் அல்லவா? நம்பிக்கையினால் செய்யப்படும் பக்தியான காரியங்களை முழுமுட்டாள்தனமான காரியங்கள் என்று சொல்லுவதில் அறிவுள்ளவர்களுக்கு ஆட்சேபனையிராதென்று நம்புகின்றோம். ஆகவே இதுவரையிலும் கூறியவற்றால் பக்தியென்பதற்கு முட்டாள்தனமான காரியங்கள் செய்பவன் என்று பொருள்படுவதைப்பாருங்கள். ஆதலால், பக்திமான் முட்டாள் தனமான காரியங்கள் செய்பவன் என்று ஆகின்றான். இது உண்மை என்பதில் சந்தேகமில்லை. வேண்டுமானால் பக்திமான் என்பவன் செய்கின்ற காரியங்களைப்பாருங்கள், உண்மை விளங்கும்.

ஏழைமக்களின் இரத்தத்தை உறிஞ்சிப்பொருளீட்டும் பக்திமான்களை யெடுத்துக்கொள்வோம். இவர்கள் தாம் செய்த அக்கிரமங்களை-பாவங்களை நீக்கிக்கொள்ள பக்திமானாகின்றனர். அதற்காக அவர்கள் செய்யத்தொடங்கும் காரியங்கள் என்ன? பெரியபணக்காரர்களாயிருந்தால்கோயில்கட்டுகின்றனர், கும்பாபிஷேகம் செய்கின்றனர், பிராமணபோஜனஞ் செய்கின்றனர், சத்திரம் கட்டுகின்றனர், பார்ப்பனர்களுக்குச்சோறுபோடுகின்றனர், வேதபாடசாலை கட்டுகின்றனர் ஆட்டுமந்தைபோல பார்ப்பனப்பிள்ளைகளைத் தேடிப்பிடித்து அடைத்துச்சோறுபோடுகின்றனர்.

குறைந்த பணமுள்ள பணக்காரர்கள் கோயில்களுக்கு உற்சவம் செய்கின்றனர், சாமிகளுக்கு அபிஷேக ஆராதனை செய்கின்றனர். இவ்வாறு பக்தியினால் செய்யும் காரியங்களால் நாட்டிற்கு-நாட்டுமக்களுக்கு ஏதாவது பயனுண்டா என்று ஆலோசித்துப்பாருங்கள். ஒருபயனுமற்ற குழவிக்கல்லுகளுக்காக ஏராளமாகச்செலவு செய்வதுதான் பக்தியென்று நினைக்கப்படுமானால்-ஒன்றை நினைத்துக்கொண்டு கண்மூடிச் சோம்பேரியாக உட்கார்ந்து கொண்டிருப்பது தான் பக்தியென்று கருதப்படுமானால்-ஒருபயனுமற்ற வேடங்களைப்பூண்டு கொண்டிருப்பதுதான் பக்தியென்று எண்ணப்படுமானால்-இதை முட்டாள்தனமென்று சொல்லப்படுவதைத்தவிர வேறு எந்தப் பெயரால்தான் அழைக்கமுடியும்?

இக்காலத்தில்மட்டும் பக்திமான்கள் இப்படியிருக்கிறார்கள் என்பதில்லை. பண்டைக்காலத்திலும்பக்திமான்கள் படுமுட்டாள்களாகவேயிருந்திருக்கிறார்கள் என்பதைப்"பரிசுத்தமான" புராணங்கள் கூறகின்றனவல்லவா? இயற்பகை நாயனார் தனது மனைவியை ஒருபார்ப்பனச் சந்நியாசியுடன் கூட்டியனுப்பியதற்குக்காரணம் பக்திதானே. சிறுத்தொண்டர் ஒருநரமாமிசம் புசிக்கும் பைராகிக்காகத்தனது அருமந்த புதல்வனைக்கொன்று கறிசமைத்தார் என்பது பக்தியினால்தானே. மாணிக்கவாசகர் அரசனுக்குக்குதிரை வாங்கும்பொருட்டு எடுத்துச்சென்ற பணத்தைக்கொண்டு கோயில் கட்டிவிட்டு அரசனை ஏமாற்றியதும், நம்பிக்கைத் துரோகம் செய்ததும் பக்தியினால் தானே. திருஞானசம்பந்தர் மனிதஇயற்கைக்குமாறாகச் சிவகாருண்யமின்றி எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றிக்கொன்றார் என்பதை உண்மையென்று ஒப்புக்கொண்டு அதைப்பாராட்டுவதும்; அதற்காக ஆண்டாண்டுதோறும் திருவிழாச் செய்வதும் பக்தியினால்தானே. இவ்வாறே ஆராய்ந்துகொண்டு செல்வோமானால் பக்தி என்பது படுமுட்டாள்தனம் என்பதற்கு எண்ணற்ற உதாரணங்கள் முன்னோர்கள் நூல்களிலிருந்தும் காட்டலாம். பின்னோர்கள் நடவடிக்கைகளிலிருந்தும் காட்டலாம். முதலில் நமது நாட்டுமக்கள் ஒற்றுமையடையவேண்டுமானால் பக்தியென்னும் படுமுட்டாள்தனம் அடியோடு ஒழியவேண்டும். கிறிஸ்தவ பக்தி-முஸ்லீம் பக்தி-இந்து பக்தி என்பனவாகிய இவையெல்லாம் அடியோடு அழியுமானால் இந்து முஸ்லீம் கிறிஸ்துவமதச்சண்டைகள் இருக்க இடமுண்டா? இவர்களுக்குள் சகோதரபாவம் நிலைத்து நிற்குமல்லவா.

பாமர மக்களிடம் உள்ள பக்தி ஒழியுமானால் அவர்கள் யாவராலும் ஏமாறமாட்டார்கள், எவரும் அவர்களை ஏமாற்றவும் முடியாது. இன்று மக்கள் அடிமைப்பட்டிருப்பதற்குக் காரணம்-மக்களிடம் அடிமைப்புத்தி நிலைத்திருப்பதற்குக் காரணம் பக்தியென்பது அவர்களிடம் இருப்பதேயாகும். ஆகையால் பக்தியென்னும் முட்டாள்தனத்தை உலகில் இல்லாமல் ஓட்டவேண்டியது அறிவுடையவர்களின் கடமையாகும். நாம்மேற்கூறியதை நன்றாய் ஆலோசித்து உண்மையா, அல்லவா என்று ஆராய்ந்த பின் ஒரு முடிவுக்குவாருங்கள்.

இந்திய ஜனத்தொகை.

இவ்வருஷம் எடுத்த ஜனத்தொகைக்கணக்குபின்வருமாறு:-

இந்தியா முழுவதும்.

352,986,876,

ஆண்கள்	181,921,914
பெண்கள்	171,064,962
இந்துக்கள்	238,330,912
முஸ்லிம்கள்	77,743,928
கிறிஸ்தவர்கள்	5,961,794
பிரிட்டிஷ் இந்தியா.	
மொத்தம்	271,273,107
இந்துக்கள்	176,934,435
முஸ்லிம்கள்	67,085,510
சீக்கியர்	3,192,169
கிறிஸ்தவர்	3,531,703
சென்னை மாகாண [பிரிட்டிஷ் இந்தியா.]	
மொத்தம்	46,575,670
இந்துக்கள்	40,392,900
முஸ்லிம்கள்	3,316,083
கிறிஸ்தவர்	1,770,328
சென்னை சுதேச சமஸ்தானங்கள்.	
மொத்தம்	6,754,484
இந்துக்கள்	4,323,150
முஸ்லிம்கள்	467,396
கிறிஸ்தவர்	1,958,811
இந்தியா முழுவதிலும்.	
சீக்கியர்	4,306,442

பார்சிகள்	106,973
ஜெயினர்	1,205,235
பௌத்தர் (பர்மா நீங்கலாக)	400,000
யூதர்	20,984
பாஞ்சாலத்தில்.	
இந்துக்கள்	8,599,721
முஸ்லிம்கள்	14,929,896
சீக்கியர்	4,071,624
கிறிஸ்தவர்	419,353
ஜெயினர்	35,284
பௌத்தர்	5,723
வங்காளத்தில்.	
இந்துக்கள்	22,179,813
முஸ்லிம்கள்	27,842,940
பௌத்தர்கள்	330,333
கிறிஸ்தவர்கள்	183,340

10 வருஷங்களுக்கு முன்னால் எடுத்த ஜனத்தொகையை விட சுமார் 5 கோடி அதிகமாயிருக்கிறது. இந்துக்கள் தொகையில் 100க்கு 10 வீதமும், முஸ்லிம்கள் தொகையில் 13 வீதமும், சீக்கியர் தொகையில் 33 வீதமும், பௌத்தர் தொகையில் 8 வீதமும், பார்சிகள் தொகையில் 5 வீதமும் ஜனத்தொகை கூடியிருக்கிறது.

பொதுக்கூட்டம்,

11-10-31 தேதி ஞாயிற்றுக்கிழமை குடியாத்தம் ஆதிதிராவிட பாடசாலைக்கருகில் ஏழை மாணவர் முன்னேற்றக்கழக மூன்றுவதாண்டு விழா விருதுநகர் மாகாணசுயமரியாதைப் பெண்கள் மகாநாட்டின் தலைவி திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது சமயம் ஈரோடு ஈ.வெ. இராமசாமி, எஸ். இராமநாதன் எம்.ஏ.பி.எல்., எஸ். முருகப்பா, பி. கெ. சந்தோஷம் பி. ஏ. எல். டி., ஜே. என். சாமிநாதம், என். எஸ். தையல்நாயகம் பி.ஏ., எல்.டி., முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள் என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

கொடைக்கானல் முனிசிபல் எலக்ஷன்.

21ம் தேதி திங்கட்கிழமை காலை சுமார் 10-மணிக்கு முனிசிபல் எலக்ஷன் நடந்தது. அதில் கீழ்கண்ட கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1-வது வார்டு:-ஜெயராஜ் நாடார் அவர்கள்.

2-வது வார்டு:- 1 சுப்பையா நாயுடு, 2 பிச்சை மேஸ்திரி.

4-வது வார்டு:-1 ராவ் பகதூர், பி. ஹசன்சரீப் அவர்கள், 2 முஸ்தபா ராவுத்தர், 3-ராஜீ அவர்கள்.

8-வது வார்டு:- 1-வெள்ளையன் மேஸ்திரியார், 2 நாகமலை.

9-வது வார்டு:-செல்லையாரைட்டர் அவர்கள்.

ஆதிதிராவிடர்களுக்கு:- அறிய முத்து மேஸ்திரி அவர்கள்.

சுமார் காலை 11-மணிக்கு மேற்கண்டபத்து இந்திய கவுன்சிலர்களுக்கும் இதற்காக அதிக சிரத்தையெடுத்தஜனாப் மகமத்யாகூப் அவர்களுக்கும், மாலைகுட்டி பாண்டுவாத்தியங்களுடன் மோட்டார் வண்டியில் கடைவீதிமார்க்கமாகவும், மற்றும் முக்கியாஸ்தாக்கள் மூலமாகவும், ஊர்வலம் வந்தார்கள். இந்த ஊர்வலத்தை பார்க்குமாறு சுமார் 1000 ஜனங்கள் கூடினார்கள். அந்த சமயத்தில் வாழைப்பழம், ரொட்டி, பிஸ்கட், தேங்காய், பலகாரங்கள் முதலியவை ஜனங்கள் மத்தியில் வீசியெறியப்பட்டது. அன்றுதினம் ஒரு திருவிழா நாளாக கொண்டாடப்பட்டது.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1927ம் வருத்து வியாஜ்ஜிய நெம்பர் 458

1929ஞு A. S. No. 65.

1931ஞு E. P. R. No. 1219.

மாரம்மாள்—வாதி.

பழனிதாலூகா தம்பசம்பட்டியிலிருக்கும் சிவலிங்க போயன் மகளும், சென்னி போயன் பெண்ஜாதியுமான வெங்கிட்டம்மாள் 4, ஷையூர் சிவலிங்க போயன் மகன் நடராஜ போயன் 5—4, 5 பிரதிவாதிகள்.

தீர்ப்புக்கடனாளியாகிய ஷை 4, 5 பிரதிவாதிகள் என்பவருக்கு, மேலேகண்ட வியாஜ்ஜியத்திலே டிக்ரி பெற்றவராகிய வாதி என்பவர் அடமான சொத்துக்களின் விற்பனைக்காக மனுச்செய்துகொண்டிருக்கிறபடியால், விற்பனை இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1931ம் ஞு அக்டோபர் மீ 10 தேதி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்று இதனால் உமக்குத் தெரிவிக்கலாகிறது.

திருப்பூர் 18-9-31 } S. Ganapathi Iyer, வாதி வக்கீல்.

திரு. வைசு. ஷண்முகம் வெற்றி.

நமது நண்பரும், மலேயாவில் பிரபல பாங்கருமான திரு. வைசு. ஷண்முகம் அவர்களின் மலாக்காவில் நடந்த வழக்கு திரு. ஷண்முகம் அவர்களுக்கு அனுகூலமாக வெற்றியோடு முடிந்தது அறிந்து மகிழ்கிறோம். இவ்வழக்கில் திரு. ஷண்முகம் அவர்களுக்கு சுமார் 2 லட்ச ரூபாய் வரை நஷ்ட மேற்படவிருந்தது கண்டு கலங்கினோம். இவரது எதிரிகள் கொண்ட மனப்பான்மை வெறுக்கத்தக்கதெனினும் கடைசியில் திரு. ஷண்முகம் அவர்களே வெற்றி பெற்றதும், தீர்ப்புக் கூறிய மூன்று நீதிபதிகளும் ஏகோபித்த ஒரே முடிவுக்கு வந்ததும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். திரு ஷண்முகமவர்களுக்கு நமது மனமார்ந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பெருநாளி.

இவ்வூர் வாலிப நாடார் ஐக்கிய சங்கத்தின் இரண்டாவதாண்டுவிழா 27—9—31ல் மதுரை திரு பா. மயாண்டிநாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவருக்கு மேற்படி சங்கத்தின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தபின் பல அறிஞர்கள் பேசியபின் கூட்டம் கலைந்ததென மேற்படி சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

பெண் தேவை.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த சுமார் 28 வயதுள்ளவரும், உபாத்திமைத்தொழிலில் 8 வருஷத்திய அனுபவமும் மாதம் 25 ரூபாய் வருமான உள்ளவருக்கு ஒரு பெண் தேவை. பெண் 18 வயதிற்குட்பட்டதாயும் எழுதப் படிக்கத் தெரிந்ததாயும் இருக்க வேண்டும். யாவரும் விதவையாயினும் தெரிவிக்கலாம். எவ்வித சடங்குகளுமின்றி விவாகம் சுயமரியாதை முறைப்படி நடைபெறும். கீழ்கண்டவிலாசத்திற்கெழுதவும்.

A. நடேசன், உபாத்தியாயர்
சாலையம்பாளையம்
வளவனூர் P. O

நோட்டீசு.
கோபிசெட்டிபாளையம் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 153 of 1931.

கொளத்துப்பாளையம் செலம்பர கவுண்டன்—வாதி.

கோபி தாலூகா சாந்திபாளையம் கிராமம் செஞ்செல்லரபாளையத்திலிருக்கும் சின்னமூப்பன் மகன் மாரமூப்பன்—1ம் பிரதிவாதி.

பீம மூப்பன் 2. காத்தா மூப்பன் 3—2, 3 பிரதி வாதிகள்.

ஷை கெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் அடமானப்பத்திரப்படி ரூ 1600-0-0 வரவேணுமாய் தாவா செய்து ஷை 1ம் பிரதிவாதிக்கு பல தடவைகள் சம்மன் அனுப்பியும் சர்வாகாததால் மறுபடி 8—10—31ல் வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் பகல் 10 மணிக்கு இந்தக்கோர்ட்டில் 1ம்பிரதிவாதி நேரிலாவது வக்கீல் மூலமாகவாவது ஆஜராகி ஆக்ஷேபணைகளை தெரிவித்துக் கொள்ளவேண்டியது தவறினால் ஒரு கட்சியாக தீர்ப்பு செய்யப்படும்.

A. R. Somasundaram,
Advocate.

கோபிசெட்டிபாளையம், 19-9-31

நோட்டீஸ்.
திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931. ஞு O. S. No. 391.

1931 ஞு I. A. No. 692.

மாணிக்க முதலியார்—வாதி.

அவனாசி தாலூகா கருவலூர் கிராமம கஸ்பாவிலிருக்கும் மாரப்பாசாரி மகன் அவனாசி ஆசாரி 1. ஷையூரிலிருக்கும் 1ம் பிரதிவாதி மக்கள் பழனியப்ப ஆசாரி 2. அவனாசி ஆசாரி 3. சின்னப்பாசாரி 4. ராமசாமி ஆசாரி 5. பிரதிவாதிகள்.

உங்களுடைய ஸ்தாவர சொத்துக்களையும் சின்னதம்பிக்கவுண்டன் வகைரா எழுதிக்கொடுத்திருக்கும் அடமானபத்திரத்தையும், தீர்ப்புக்குமுன் உடன் ஜப்தி செய்யவேணும் என்றும் ஷைவாதி மனுக்கொடுத்திருக்கிறபடியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆட்சேபணையிருந்தால் அதைநீர் 21-10-31 தேதி இந்தக்கோர்ட்டில் ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும். அப்படிக்கில்லாவிட்டால் மேற்படி விஷயமாய் ஒரு தலைபட்சமாய் தீர்மானிக்கப்படும்என்று அறியவும்.

C. S. குப்புசாமி அய்யர், வக்கீல்.

மலேயா செய்தி

தைப்பிங்கில் ஆதிதிராவிட மஹாஜன சங்க நான்காவதாண்டு விழா டாக்டர் மகமது கொஸ் J. P. அவர்கள் தலைமையில் 5—9—31 ந் தேதி கூடிற்று. விழாவுக்கு திருவாளர்கள் அய்யாரு டிஸ்ட்ரிக்ட் ஆபீசர், டேனிடரி போர்ட் ஆபீசர், சாமி அற்புதானந்தா, K. S. A. பாண்டியன், V. S. சிதம்பரம், P. M. S சிவனடியார், மணிவேல், அ வயிரவன், ஆர். மாயழகு, மாணிக்கம், முதலிய அநேக கனவான்கள் பலஊர்களில் இருந்தும் விஜயம் செய்திருந்தார்கள்

நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

மன்னர் ஜார்ஜ் சக்கரவர்த்தியாரும், பாதுஷா மோசம் தான் அவர்களும் நீடுழி வாழவும், கவர்னர் ஹை கமிசனர், சீப்செகரட்டரி, பிரிட்டிஷ் ரெசிடெண்ட், டிஸ்ட்ரிக்ட் ஆபீசர் ஆகியவர்கள் தங்கள் சமூக நன்மைக்கு செய்த உதவிக்காக வணக்கமும், நன்றியறிதலும் செலுத்துவதாகவும், தைப்பிங் தேவஸ்தான போர்டில் ஆதிதிராவிட பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்றும், கோவில் பிரவேசமளிக்க வேண்டுமென்றும், ஆதிதிராவிட சமூக அனுமதி இல்லாமலும், அறிவிப்புஇல்லாமலும் புதிதாகத் தயாரிக்கப்பட்ட டீட்ஆப் டிரஸ்டை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், திருவாளர்கள் குஞ்சிராமன் நாயர், இந்தியா ஏஜண்டுக்கும், கனம் வீராசாமி J. P. அவர்களுக்கும், நன்றிசெலுத்துவதாகவும், சங்கத்தலைவர் டாக்டர் மகம்மது கொஸ் J. P. அவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும், இராமநாதபுரம்ஜில்லாவில் மேல் ஜாதியாரால் ஆதிதிராவிடர்கள் படும் கஷ்டத்தை கனம் ஹோம்மெம்பர் கவனித்து வேண்டிய ஏற்பாடுசெய்ய ஒப்புக்கொண்டமைக்கு நன்றி செலுத்தியும், அத்திரமானம் நிறைவேறியதைக் குறித்தும் மகிழ்ச்சியடைவதாகவும், கமிட்டி நியமிக்க தீர்மானம் கொண்டுவந்த திரு W. P. A. சௌந்திரபாண்டியனுக்கும் ஆமோதித்த திரு. சிவராஜுக்கும் மற்ற அபிமானிகளுக்கும் நன்றி செலுத்துவதாகவும், வீடெட்டுக் கொள்ள வட்டியில்லாத கடன் கொடுத்த மைசூர்மகாராஜாவுக்கு நன்றி செலுத்தியும், இந்தியாவில் ஆதிதிராவிடருக்கென்றே உழைத்துவரும் திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியாருக்கும், மற்றும் அவரது சகாக்களுக்கும் நன்றி செலுத்துவதாகவும், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் மீட்டிங்குகூட டவுன்ஹால் உதவின சேனிடரி போர்ட் சேர்மெனுக்கும் வந்திருந்த கனவான்களுக்கும் நன்றிசெலுத்தப்பட்டது.

விருத்தம்.

முடியரசர் தமைபேய்த்தமோச
மதப்பார்ப்பனர்கள்
கொடியரசாம மநு(வு)தர்மக்
குப்பைகளைக் கொளுத்திஜெயப்
படியாசில் சமதருமம பருத்
தறியும தன்மைப்பின்
குடியரசே நீயென்றும்
குறைவின்றி வாழியவே.

முருகேச பாகவதர்,
வில்லிவாக்கம்.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்குஎழுதவும்.

YX
C/o குடி அரசு ஈரோடு.

[5ம் பக்கத்தொடர்ச்சி]

மானும் ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் எடுத்துக்காட்டிய ருஷ்ய ராஜீயக் கல்வி முறையை நாமும் கைகொள்ள வேண்டும். போதனாமுறையென்பது சிறுவர்களுக்கு மட்டும்தானென்பது பழைய காலத்து சம்பிரதாயமாகும். பள்ளிக்கூடங்களில் வெகுவாய் படித்தவர்களில் பெரும்பாலோர் நமது நாட்டில் தமது பிற்கால வாழ்வில் தமது கல்வியை அடியோடு மறந்து விடுகிறார்களென்பது பிரத்தியக்ஷம். வயது வந்தவர்களுக்கும் கல்விபுகட்ட வேண்டியது கல்வி முறையின் முக்கிய லட்சியமென்றே ஒப்புக்கொள்ளப் பட வேண்டும். நமது நாட்டில் கோடிக் கணக்கான மக்கள் எழுத்து வாசனையறியாதிருப்பதற்குக்காரணம் வயது வந்தவர்களுக்கும் கல்வி போதிக்க வேண்டு மென்ற கடமையை நாம் உணராததேயாகும். இராப்பள்ளிக் கூடங்களில் சில தொழிலாளர்களுக்கும், தீண்டப்படாதார்களுக்கும் சிற்சில இடங்களில் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆனால் பெருவாரியான மக்களுக்கு சினிமா, பேசும்படக் காக்ஷி, ஆகாசவசனி முதலிய நவீன சாதனங்களின் மூலம் கல்வி கற்பிக்க நாம் தீவிரமாக முன் வரவேண்டும். கண்காக்ஷி சாலைகளும், புஸ்தக சாலைகளும் பொது மக்களுக்கு கல்வி கற்பிக்கும் நோக்கத்துடன் ஏராளமாக ஏற்படுத்தப் பட வேண்டும். பொது மக்களின் செலவில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் இந்த மகாஜன ஹைஸ்கூல் போன்ற பள்ளிக்கூடங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் தாங்கள் இப்பொழுது பெறும் கல்வி மூலம் பொது ஜனங்களிடம் தாங்கள் கடன் பட்டிருப்பதாகக் கருதி, இந்தக் கடனைத் தீர்ப்பதற்கு தாங்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிய பிறகு எழுத்து வாசனையறியாத பொது மக்களுக்குக் கல்வி கற்பிப்பதின் மூலம் பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபட்ட பிறகே தாங்கள் பட்ட கடனைத் தீர்த்தவர்களாக தங்களை கருதிக் கொள்ள வேண்டும். இன்று இந்த அரிய விஷயத்தை மிகுந்த ஆராய்ச்சியுடனும், தைரியத்துடனும் உங்களுக்கு எடுத்துச் சொன்ன ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாளுக்கு மீண்டும் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு இந்தக் கூட்டத்தை முடிக்கிறேன்.

நோட்டீஸ்.

திருப்பூர்

ஜி. மு. கோர்ட்டு

O. S. No. 444 of 31

திருப்பூர் டவுன் Bank Ltd. by டைரக்டர்கள் இன்சார்ஜ் 1. C. L. பவான் சிங் 2. K. சாமிநாத செட்டியார். வாதிகள்.

கோயமுத்தூர் டி. மு. கோர்ட்டு சேர்ந்த கோயமுத்தூர் தாலூகா செட்டிபாளையம் கிராமம் மஜரா ஓராட்டு குப்பி செட்டிபாளையத்திலிருக்கும் சொக்கய்யஞ் செட்டியார் மகன் சொ. சாமியப்ப செட்டியார்.

பிரதிவாதி.

ஷை வாதிகள் வக்கீல பிரதிவாதிக்கு தெரியப் படுத்தும் நோட்டீஸ்.

ஷை நெம்பரில் வாதிகள்-பிரதிவாதி பேரில் இரண்டு புரோ நோட்டுகளின் படி ரூபாய் 2858—5—4 கிடைக்க வேணுமாய தாவா தொடர்ந்து ஷை நெம்பர் விசாரணைக்காக 1931 அக்டோபர் மாதம் 27 ந் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை நெம்பரில் பிரதிவாதிக்கு ஏதாவது ஆக்ஷேபனை யிருந்தால் ஷை உ காலை 10 மணிக்கு நேராகவோ வக்கீல் மூலியமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் ஒரு தலைப் பக்ஷமாக உத்தரவு ஏற்படுமென்கிற விபரம் அறியவும்.

(S d) Y. D. ஜேசுதாசன்.
பி. ஏ. பி. எல். அட்வகேட்
திருப்பூர் 28-9-31.

தாதுபுஷ்டிக்கு



பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும, இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆறாத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி, S. I.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்படுத்திக் கொண்டதல்லாமலும், தனக்குத்தெரிய முடியாத ஒரு தெய்வ சக்தியாலும், அதுவும் தான் பிறப்பதற்குமுன்பாக எப்போதோ ("முன் ஜென்மத்தில்") தான் செய்த காரியங்களுக்குப் பலனாக அனுபவிப்பதாகவும் கருதி தாழ்வையும், வித்தியாசத்தையும் அனுபவிக்கவேண்டியதேநமது கடமையாகும் என்கின்ற உணர்ச்சியைமக்களுக்குள் புகுத்தி இருப்பதன் பயனாய் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இதை அறிவுள்ள, சமதர்மவுணர்ச்சியும் சமத்துவ நோக்கமும், இரக்கமும், பகுத்தறிவும், சுயமரியாதையும் உள்ள ஒருமனிதன் பார்ப்பானே யானால் அவன் இந்த வகுப்பு அமைப்பையும், அநுபவத்தையும் அக்கிரமம் என்பதாகவுமகட்டுப்பாடானகொள்ளைத்தனமையே அல்லாமல் இதில் சிறிதும் நேர்மையோ, நாணயமோ அடியோடு இல்லை என்பதாயும் உணர்வான். பழி.

ஆகவே மேலே கூறப்பட்டுள்ள தன்மையெல்லாம் சமதர்மக் கண்ணுக்கு சரியென்று தோன்றும் மாதிரியாகவும், நடுநிலைமை மனதுக்கு நோ என்று புலப்படும் மாதிரியாகவும் சரிப்படுத்தப்பட வேண்டுமானால்- அதற்குச் சரியான பயன் தரத்தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமானால் அவைகளை அதன் எதிரிகள் 'புரட்சி' என்று சொல்வதோடல்லாமல், மற்றும் அம்முயற்சிகளை இராஜத்துரோகமென்றும், அராஜகமென்றும் சதியாலோசனையென்றும், பலாத்காரமென்றும், கொலை என்றும், கொள்ளை என்றும், இம்சை என்றும், அக்கிரமமென்றும் அயோக்கியத்தனமென்றும், விபசாரமென்றும், திருட்டு என்றும், புரட்டு என்றும், பாவமென்றும், பாதகமென்றும், மற்றும் 'குற்றமாய்'க்கருதுவதற்குள்ள பெயர்கள் கொண்ட வார்த்தைகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும்சொல்லி நம்மை இழிவுபடுத்துவதுடன் நம்மை துன்பப் படுத்தியோ, தண்டித்தோ தான் தீருவார்கள்.

இவ்வளவு பெயர்களையும் தாராளமாய் பெறவும், அவற்றால் வரும் தண்டனைகளையும் பழிகளையும் ஏற்கவும் தயாராய் இருக்கும் ஒருவன்தான் இவ்விஷயத்திற்குச்சிறிதாவது தொண்டு செய்ய முடியுமேயொழியமற்றபடி இதில்எதற்காவது,கடுகளவாகிலும் பயந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு நமது இயக்கத்தில் இடமில்லை என்று தான சொல்லவேண்டும்.

கொள்கை.

நாம் வம்பில் யாருடைய சரீரத்தையும் இம்சைப்படுத்துவதாலோ யாரையாவது கொல்லுவதாலோ, ஒருகாரியத்தைச்சாதிக்கவேண்டும் என்பது நமது எண்ணமல்ல. நமது இயக்கத்தின் கொள்கையும் அதுவல்ல. கண்டிப்பாய் அதுவல்ல, மற்றும் பொய்யாக, ஏமாற்றமாக, வஞ்சகமாக 'நாங்கள் அஹிம்சைக்காரர்கள்' என்றுவேஷம் போடுகின்றவர்களும் அல்ல.

நமது கடமையைச் செய்கின்றோம். ஏற்பட்ட பலனை அனுபவிக்கின்றோம். சூது, வாது, புரட்டு, "தத்துவார்த்தம்" ஆகியவைகள் நம்மிடமில்லை. நல்லவிலைக்கு உயிரைக்கொடுக்க இருக்கிறோம். உண்மையான பலனுக்கு எவ்வித கஷ்டத்தையும ஏற்போம். வீண் வாயளப்பும், விளம்பர வியாபாரமும், இரண்டு அர்த்தம் படும்படியாய்ப்பேசித் தப்பித்துக்கொள்ளும் கோழைத்தனமும் நமது இயக்கத்தில் இடம்பெற முடியாது.

லக்ஷியம்.

நமது லக்ஷியமெல்லாம், கொள்ளைகூடாது, கொலை கூடாது, திருட்டு கூடாது, ஏழ்மை கூடாது, பொய் கூடாது, தாழ்வு கூடாது, இழிவு கூடாது, அடிமைகூடாது, மூடத்தனம் கூடாது, வஞ்சகம் கூடாது, ஏமாற்றம் கூடாது, என்பவைகளேயாகும்இவைஎந்தஉருவத்தில் எந்தப்பெயரால் எப்படிப்பட்ட போர்வையைபோர்த்திக்கொண்டு எங்கிருந்தபோதிலும், என்ன கஷ்டப்பட்டாவது, எப்பாடுபட்டாவது அவைகளை ஒழிக்கவேண்டும் என்பதேயாகும்.

"தேசீயம்."

மற்றும் சுயமரியாதை இயக்கம் தேசீயத்திற்கு எதிராக இருப்பதாகவும், மக்களின்ஜீவியத்திற்காகக் கண்டுபிடித்திருக்கும் கதர் என்னும் கைத்தொழிலுக்கு விரோதமாக இருப்பதாகவும், இந்தியத்தாய்ப் பாஷையாகிய "ஹிந்தி"க்கு விரோதமாக இருப்பதாகவும் குறை சொல்லப்படுகின்றது. இதை நாம் மறைக்க ஆசைப்படவில்லை.பழமையையே காப்பாற்றும்எந்த தேசீயத்திற்கும், மிருகப்பிராயத்திற்கு அழைத்துக்கொண்டுபோகும்கதருக்கும், வருணாச்சிரமத்தை போதிக்கும் ஹிந்தி தாய் பாஷையாய் இருந்தாலும், தகப்பன் பாஷையாக இருந்தாலும் அப்பாஷைக்கும் நாங்கள் விரோதிகள் தான்! எதிரிகள்தான்!! எதிர்ப்பிரசாரம்செய்யவேண்டும் என்கிற ஆசையுடையவர்கள் தான்!!! இதில் ஒளிமறைவு ஒன்றும் இல்லை. மற்றும் மனித சமூகத்தில் பிராமணன் என்றும், சூத்திரன் என்றும், பஞ்சமன் என்றும், ஏழை என்றும், பணக்காரன் என்றும், முதலாளி என்றும், தொழிலாளி என்றும், ஜமீன்தாரன் என்றும், குடியானவன் என்றும், எஜமான் என்றும் சேவகன் என்றும், வேலையாள் என்றும், ஆண் என்றும், பெண் என்றும்,வித்தியாசங்களைக்கற்பிப்பதையும், வித்தியாசங்களைக்காப்பாற்றுவதையும் கொள்கையாயும் லக்ஷியமாயும் கொண்டதே தேசீயமாயிருந்தால், அப்படிப்பட்ட தேசீயத்திற்கு நாங்கள் விரோதிதான். அப்படிப்பட்ட வித்தியாசங்களை ஒழிப்பதும் அடியோடு அழிப்பதும்என்பதை கொள்கையாயும் லக்ஷியமாயுங்கொண்டதே தேசீயமாயிருந்தால் அப்படிப்பட்ட தேசீயத்திற்கு நாங்கள் எப்பொழுதும விரோதிகளாய் இருக்கமாட்டோம்.

ஏனெனில், இவற்றையு தான் நாங்கள் கொள்கையாய்க்கொண்டிருக்கிறோம். "இவைதான்தேசீயத்தினுடையவும் கொள்கை" என்றால் நாளையதினமே சுயமரியாதை இயக்கத்தைக் கலைத்துவிடலாம் 'புரட்சியை' ஒழித்துவிடலாம், 'சதியாலோசனையை' வெட்டிப் புதைத்துவிடலாம். அந்தப்படியில்லாமல் வருணாசிரமத்தைநிலைநிறுத்தவும்,முதலாளிகளைக் காப்பாற்றவும் ஜமீன்தாரர்களுக்கு பந்தோபஸ்து அளிக்கவும் தொழிலாளிகளுக்கு உயிர் பூக்கு வேண்டிய அளவு கூலி மாத்திரம் கொடுக்கவும், தேசீயமும், காங்கிரசும் இருக்கின்றன வென்றால் அந்த தேசீயத்தையும், காங்கிரசையும், ஒழிப்பதுடன் அதனுடன் அரசாங்கத்தையும் ஒருகை பார்க்கவேண்டியவர்களாகவே இருக்கின்றோம்.

பயப்படவில்லை.

காங்கிரசுக்கும் தேசீயத்திற்கும், இருக்கும் அபரிமிதமான செல்வாக்கு எவ்வளவு என்பது எங்களுக்குத்தெரியும். அரசாங்கத்திற்கு இருக்கும்மிருக பலமும், இயந்திர பலமும் எங்களுக்குத் தெரியும். ஆனாலும் நாங்கள் அவற்றிற்குப் பயப்படவில்லை. ஏனெனில், காங்கிரசின் செல்வாக்கெல்லாம் சுயநலக்காரர், சூழ்ச்சிக்காரர், வயிற்றுப்பிழைப்புக்காரர் ஆகியவர்களின் பிரசாரத்தின் பயனும், மக்களின் முட்டாள்தனத்தின பயனும், மூடநம்பிக்கையின் பயனும் தான் இருந்துவருகின்றது என்பதைநாங்கள் அறியாமலில்லை. அதுபோலவே அரசாங்கத்திற்கிருக்கும் பலமும், அவர்களது சுயநலகாரணமாகவும், நம்மவர்களது வருணாச்சிரம பிரிவின்பலனாகவும்தான் இருந்து வருகின்றது என்பதும் எங்களுக்குத் தெரியும். இவைகளை ஒழிக்கும் வேலைக்கு சீக்கிரத்தில் உலகமே எங்களுடன் சேரும் என்கின்ற தைரியம் எங்களுக்கு உண்டு. அதிசீக்கிரத்தில் முட்டாள்தனம் ஒழிந்து, மூடநம்பிக்கை ஒழிந்து உண்மையை உணரும் காலம் வந்துவிடும் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. வேண்டுமானால், எங்கள் ஆயுளுக்குள் முடியுமா என்பது மாத்திரம்தான் சந்தேகமான காரியமாய் இருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. எங்கள்காரியம் சரியா, தப்பா என்பதுதான் எங்கள் கவலை. எங்களுக்குச் சரியென்று தோன்றியதை செய்யவேண்டியது எங்கள் வேலை. பலன் எங்களுக்குக் கிடைப்பதும், எங்கள் பின்வார்சுகளுக்குக் கிடைப்பதும் ஒன்றுதான்.

நாங்கள் எங்களுடைய கொள்கைகளை இன்சூரன்ஸ் செய்கின்றோம். அதாவது நாங்கள் செத்தபிறகு எங்கள் வார்சுக்கு பலன் கிடைக்கவேண்டும் என்பதாகவே கருதி செய்கின்றோம். ஒருசமயம் எங்கள் வாழ் நாளிலேயே இன்சூரன்ஸ் பூர்த்திபெறுவதாக இருந்தாலும நல்லதுதான். ஆனால் 'லைப் (ஜீவன) இன்சூரன்ஸ்'செய்வதின் உத்தேசமெல்லாம் எப்படி பின்வார்சுக்குத்தான என்று கருதப்படுகின்றதோ, அதுபோலவே எங்கள் தொண்டும் எங்கள் பின்வார்சுக்குத்தான் என்றே கருதுகின்றோம்.

ஆகவே சகோதரர்களே! நாம் ஊரார பழிப்புக்கும், தூற்றலுக்கும பயப்படாமல், நமது கொள்கைக்கே நமது வாழ்க்கையையும், சுவாசத்தையும் ஒப்படைத்துவிடவேண்டும். இன்றைக்குச் சாவதற்கும், இனியும்கொஞ்சகாலம் பொருத்து சாவதற்கும் வித்தியாசம் பார்க்கவேண்டியதில்லை, சித்திரவதையைவிட சாவு மேலென்பதையும், அடிமையாய் வெளியில் இருப்பதைவிட சுயேச்சையாய் காவலிலிருப்பது மேலென்பதையும நீங்கள் உணர்ந்ததேயாகும். ஆகையால் உங்கள் உண்மைக்கும், உங்கள் முடிவுக்

கும், உங்கள் கடமைக்கும் உயிர் வாழுங்கள்.

பெண்கள் நிலை.

நிற்க, இந்தச் சமயத்தில் பெண்களாகிய எனது சமூக நிலைமையைப் பற்றியும் இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டு, என் கடமையை நிறைவேற்றுகின்றேன். அன்பர்களே! எனது சமூகமாகிய பெண் சமூகம் இந்நாட்டில் தீண்டாதார்களைவிட மிக்கக் கொடுமையாய் நடத்தப் படுகின்றது என்பதை நீங்கள் மறக்க மாட்டீர்கள். பெண்கள் என்றால் ஒரு ஆணைக் கொண்டு கழுத்தில் கயிறு கட்டச் செய்து, பிள்ளைகளைப் பெற்று வளர்த்துக் கொண்டிருக்க வேண்டியவைகளே தவிர, மற்றும் தான் இன்பம் கொடுத்த புருஷனுக்கும், தான் பெற்ற பிள்ளைகளுக்கும் அடிமையாய் இருப்பதைத் தவிர வேறு ஒரு வேலையும், யோக்கியதையும் கிடையவே கிடையாது. பெண்ணாகப் பிறந்ததற்காக வென்று இவ்வித அடிமையாயும் உயிரற்ற ஜடமும் இயந்திரமாயும் இருப்பதை விட முகம்மது நபி பிறப்பதற்கு முன் அரேபியா தேசத்தில் இருந்து வந்த பழக்கம்போல், அதாவது குழந்தை பிறந்தவுடன் ஆணா, பெண்ணா என்று பார்த்து, ஆணாயிருந்தால் வைத்துவிடுவதும், பெண்ணாயிருந்தால் கழுத்தில் காலை வைத்து மிதித்துக் கொன்றுவிடுவதுமான முறை மிகவும் யோக்கியமானதும், ஜீவகாருண்யமானதுமென்று தாராளமாய்ச் சொல்லுவேன். புருஷனுக்கு அடிமையாய் இருக்கவும், பிள்ளை பெறவும் என்பதாக பெண் சமூகம் உயிர் வாழவேண்டுமா என்பதை நினைத்துப் பாருங்கள். பிள்ளை பெறுவதில் உள்ள கஷ்டமும், ஆபத்தும் எவ்வளவு என்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். புருஷன்மார்களுக்கு அடிமையாய் இருப்பதில் உள்ள கஷ்டத்தையும், அவமானத்தையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இந்தப்படி நினைத்துப் பாருங்கள்.

நான் இந்தப்படி சொல்லுவதில் பெண்கள் நிலைமை உங்களுக்குப் புரியாததாகயிருக்கலாம். ஆனால் நான் கீழே சொல்லப் போகின்றபடி நினைத்துப் பார்த்தால் ஒரு சமயம் உங்களுக்குப் புரிந்தாலும் புரியக்கூடும் என்று நினைக்கின்றேன். அதாவது —

ஆண்களாகிய உங்களை ஒரு பெண்ணானவள் தன் சௌகரியப்படி தெரிந்தெடுத்து கலியாணம் செய்துகொள்வதாய்க் கருதி அதன் அறிகுறியாய் உங்கள் கழுத்தில் ஒரு கயிறு (தாலி) கட்டி, தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கு தன்னுடைய தாய் தகப்பன் மாமனுக்கும், சகோதரர்களுக்கும் நல்ல பிள்ளையாய் நடந்துகொள்ளச் செய்து, தன் வீட்டைப் பெருக்கவும், மெழுகவும், சமையல் செய்யவும், குழந்தைகள் மலம் ஜலம் கழிப்பதை சுத்தம் செய்யச் செய்யவுமான காரியங்களை உங்களைக் கொண்டு செய்வித்துக்கொள்வதோடு, அப்பெண் வெளியில் சென்று, எங்குபோய் என்ன செய்துகொண்டு வந்தாலும், மற்றும் உங்களைப்போல் இரண்டு மூன்று ஆண்களையும் அதேமாதிரி தாலிகட்டி, இழுத்துக்கொண்டுவந்து, அதே வீட்டில் வைத்து "நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும். உங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டால் அடிப்பேன், உதைப்பேன்' என்று சொல்லி, உங்களை எப்படி அடித்தாலும் ஏன் என்று கேள்வி கேட்கக்கூட உங்களுக்கு உரிமையில்லாமல் செய்து, நீங்கள் ஜன்னல், கதவு முதலியவைகளைத் திறந்து பார்த்தால் தலையில் குட்டுவதும், வீதிக்கு வந்தால் கால் கைகள் ஒடியும் மாதிரி தண்ணீர் தடியால் அடிக்கவும், உள்ளே தள்ளுவதும், உங்கள் காதுகளில் 10, 16 ஓட்டைகளும், மூக்கில் மூன்று நான்கு ஓட்டைகளும் செய்து, அவைகளில் எல்லாம் பாரங்கள் ஏற்றி, கால், கைகளில் எல்லாம் நடக்கவும், ஓடவும் முடியாமல் விலங்குகளைப்போல் நகைகளை (நகைகளை) மாட்டி 16 முழம் 20 முழம் உள்ள துணிகளைச் சுற்றிச் சுற்றி முழங்கால் வரைக்கட்டியும் வைத்திருந்தால் அந்தச் சமயம் நீங்கள் உங்கள் நிலைமையை எப்படி நினைத்துக் கொள்ளுவீர்கள்? என்பதையும், மற்றும் உங்களுக்குக் கல்வி கொடுக்காமலும், கொடுத்தால் உங்கள் கள்ள ஸ்திரீகளுக்கு கடிதம் எழுதுவீர்கள் என்றும், சொத்து கொடுக்காமலும், சொத்துரிமை கொடுத்தால் பெண்களுக்கு அடங்கி நடக்கமாட்டீர்கள் என்றும் சாக்குகள் சொல்லி, மற்றும் உங்கள் இஷ்டத்தைத் தெரிந்துகூட உங்களைப் பெண்கள் கட்டிக்கொள்ளாமல் ஒரு பெண் இஷ்டப்பட்டு விட்டால் அப்பெண் மொண்டியோ, முடமோ, கூனோ, குருடோ, மூக்கறையோ, செவிடோ, ஊமையோ என்று பார்க்கின்ற உரிமைகூட உங்களுக்கு இல்லாமல், நீங்கள் "உங்களைக் கொண்ட பெண்களுக்கு அடிமையாக இருப்பதுதான் "கற்பு," அதுதான் "மோக்ஷம்" என்பதாக கருதவேண்டும்" என்று செய்தால், அந்த நிலைமையில் உங்களைப் பற்றி நீங்கள் [illegible] கொள்ளுவீர்கள்? என்பதையும், மற்றும் வேறு ஏதோ ஒரு பெண் உங்கள் மீது பட்டுவிட்டதற்காக, அல்லது உங்களிடம் பேசிக்கொண்டிருந்ததற்காக உங்களைக் கொண்ட பெண் உங்களை ஜாதியை விட்டு தள்ளியோ, வீட்டை விட்டு துரத்தியோ, அல்லது சிறைவைத்து காவல்போட்டோ, அல்லது வயிறு நிறையக்கூட உங்களுக்கு கஞ்சி விடாமல், தினமும் அடித்து, கொடுமைப்படுத்தினால், உங்கள் நிலைமையைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? என்பதையும் சற்று நினைத்துப் பாருங்கள்.

நண்பர்களே! இந்தமாதிரி நிலைமையில் அல்லாமல் வேறு எந்தமாதிரி நிலைமையில் இன்று இந்தியாவில் 100க்கு 99 பெண்கள் இருக்கிறார்கள் என்று கேட்கின்றேன்.

இந்நாட்டில் பெண்கள் வாழவேண்டுமானால், ஆண்களுக்கு அடிமையாக இருக்கவேண்டியது என்பது ஒன்றேதான் மார்க்கமாகவும், மற்றபடி சுதந்திரத்துடனும், மனிதத்தன்மையுடனும் வாழவேண்டுமானால் 'தேவதாசி'த் தொழில்காரி 'விபசாரி'த் தொழில்காரி 'குச்சுக்காரி'த் தொழில்காரி என்பதான பெயர்களால் தான் வாழவேண்டி இருக்கின்றதே தவிர, மற்றபடி வேறு நிலை இல்லாமலே செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் ஆண்கள் வாழவேண்டுமானால், எத்தனை பெண்களை வேண்டுமானாலும் அடிமைகளாகக்கொண்டு வாழலாம். இன்னும் அதிக சுதந்திரமாய் வாழவேண்டுமானாலும், பாதிரியாகவும், சன்னியாசியாகவும், மடாதிபதியாகவும், சங்கராச்சாரியாகவும், பண்டார சன்னதிகளாகவும், துறவியாகவும், ஞானியாகவும், தேசபக்தர்களாகவும், சுயமரியாதை வீரர்களாகவும் வாழலாம் (அநேகர் வாழ்ந்தும் வருகின்றார்கள்) என்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், அந்தமாதிரி பெண்மக்கள் வாழ இடமில்லை. வாழ ஆரம்பித்தாலே, சுதந்திரமாய் இருக்கக்கருதினாலோ மேற் குறிப்பிட்ட தாசி, வேசி, விபசாரி, குச்சுக்காரி ஆகிய நிலைமைகள் தான். ஆகவே, உலகில் பெண்மக்கள் நிலைமையை இன்னமொருதரம் நிதானமாய் இருந்து யோசித்துப்பாருங்கள். நீதி என்பதும், தர்மமென்பதும், சமத்துவம் என்பதும், சுதந்திரம் என்பதும், ஜீவகாருண்யம் என்பதும் உலகவழக்கில் எப்படி இருக்கின்றது பாருங்கள். இவற்றையெல்லாம் மாற்ற வேண்டாமா? அடியோடு கவிழ்க்க வேண்டாமா? என்று உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். நமது சுயமரியாதை இயக்கத்தின் முதல் வேலை இதுவாகவே இருக்கவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டு இம்மகாநாட்டைத் துவக்குகின்றேன்.

நோட்டீஸ்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

1931 ௵ O. S. No. 575.

திருப்பூர் டவுன் பாங்கு லிமிடெட் by டைரக்டர்கள் இன்சார்ஜ் 1. C L. பவான்சிங், 2. K. சாமிநாத செட்டியார்—வாதிகள்.

கோயமுத்தூர் டி. மு. கோர்ட்டு சாகம் கோயமுத்தூர் தாலூகா செட்டிபாளையம் கிராமம் மஜரா ஓராட்டுகுப்பி செட்டிபாளையத்திலிருக்கும் சொக்கய்யன் செட்டியார் மகன் சொ. சாமியப்ப செட்டியார்—பிரதிவாதி.

ஷை வாதிகள் வக்கீல் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தும் நோட்டீசு, ஷை நெம்பரில் வாதிகள் பிரதிவாதி பேரில் புரோ நோட்டுப்படி ரூ. 1399-14-0 கிடைக்கவேணுமாய் தாவா தொடர்ந்து ஷை நெம்பர் விசாரணைக்காக 1931 அக்டோபர் மாதம் 23௳ வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை நெம்பரில் பிரதிவாதிக்கு ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால் ஷை தேதி காலை 10 மணிக்கு நேரிலாவது வக்கீல் மூலியமாகவோ ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபக்ஷமாக உத்திரவு ஏற்படுமென்கிற விபரம் அறியவும்.

(Sd) Y. D. ஜேசுதாசன்,
பி. ஏ., பி. எல்., அட்வகேட்.
திருப்பூர், 22-9-31.

ஐயர்லாண்ட் ஆஸ்பத்திரி குதிரைப்பந்தய லாட்டரி

மான்சேஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப் (நவம்பர் 28—1931)

1-வது பிரைஸ் 30000-பவுன்கள் 2-வது பிரைஸ் 15000-பவுன்கள், 3-வது பிரைஸ் 10000-பவுன்கள் வேறு 200 பிரைஸ்களுமுண்டு.

டிக்கட் 1-க்கு ரூ. 7—8—0 டிக்கட்டுக்கு முன்பணத்துடன் முந்துங்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:—

எஸ். கே. வரதராஜுலு, ஏஜண்ட், திருச்செங்கோடு S. I.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சற்று தயங்கினார்கள்; ஆனாலும் நாளடைவில் தைரியம் ஏற்பட்டு அறிக்கையில்கண்ட முழுகொள்கைகளையும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். அதன் பிறகே இந்த அறிக்கை பலதடவை மீண்டும் மீண்டும் ஜர்மன் பாஷையிலேயே பிரசுரித்து ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களிலெல்லாம் தாராளமாய் விநியோகிக்கப்பட்டது. 1872ம் வருஷத்தில்தான் இவ்வறிக்கை முதன்முதலாக ஆங்கில பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு அமெரிக்காவில் உள்ள ஒருவாரப்பத்திரிகையின்மூலம் வெளியிடப்பட்டது. மற்றும் இவ்வறிக்கையை 1863லும் 18-2லும் ருஷியன் பாஷையிலும் மொழிபெயர்த்து ஜினீவாவிலிருந்து அநேக இடங்களுக்கு அனுப்பிவினியோகித்து பரப்பப்பட்டது. மேலும் இவ்வறிக்கை 18-5வருஷத்தில் டேனிஷ்பாஷையிலும், 1886ல் பிரஞ்சு பாஷையிலும் புதியமாதிரியில் 1886வருஷத்தில் ஸ்பானிஷ் பாஷையிலும் மொழிபெயர்த்து ஆங்காங்கு பரப்பப்பட்டது. ஜர்மனி பாஷையில் மாத்திரம் இவ்வறிக்கை 12-பதிப்பும் இங்கிலீஷ் பாஷையில் 3-மாதிரியான மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டது. ஆர்மீனியன் பாஷையில் ஏற்பட்ட ஒரு மொழிபெயர்ப்பானது, அதன் மொழிபெயர்ப்பாளர் தனது பெயரை வெளியிட பயந்ததாலும், பிரசுரித்தவர் அவ்வறிக்கையின் கர்த்தாவான மார்க்ஸ் என்பவருடைய பெயரால் வெளியிடப் பயப்பட்டதாலும் அவ்வறிக்கை வெளிவரமுடியாமல் போய்விட்டது. இந்த மேல்கண்ட சரித்திரமே அவ்வறிக்கையின் சரித்திரமாகும்.

உலகில் உள்ள எல்லாதேசத்து வேலையாளர்களுடைய மனோபாவத்தையும் ஒன்றுபடுத்தி, அவர்கள் யாவரையும் ஒரே பொதுக் கூட்டத்தில சேர்ந்து கலந்து உழைக்கத் தக்க மனோதைரியத்தையும் கொடுத்தது இந்த அறிக்கையேயாகும்.

இவ்வறிக்கை எழுத ஆரம்பித்தகாலத்தில் இருந்து இதுவரை உலக நிலைமையில் அதிசயிக்கத்தக்க பல மாறுதல்கள் எவ்வளவுதான் ஏற்பட்டு இருந்தாலும் அவ்வறிக்கையின் தத்துவமானது இன்றை நிலைமைக்கும் மிகப்பொருத்தமானதாகவே இருந்து வருவது அவ்வறிக்கையின் விசேஷத்திற்கு ஒரு காரணமாகும்.

சமதர்ம வாதிகள் தங்களுடைய வேலைத்திட்டங்களை கால தேசவர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும் என்பது சரியானாலும் சமதர்மக்கொள்கை என்பதில் எந்தக்காலத்திற்கும் எந்த தேசத்திற்கும் இந்த அறிக்கையில் இருந்து சிறிதுகூட மாறுபடவேண்டிய அவசியம் ஏற்படாதபடி இது அமைந்திருக்கின்றது.

அறிக்கை.

உலகத்தில தோன்றி இருக்கும் ஒரு பூதத்தைக் கண்டு எல்லோருமே பயப்படுகின்றார்கள்.

அது எப்படிப்பட்ட பூதம் என்றால் அதுதான் "சமதர்மம்" என்னும் பூதமாகும்.

ஐரோப்பாவிலுள்ள சகல சக்திகளுமே அதாவது அரசாங்கச் சக்திகள், மதங்களின் சக்திகள் முதலாகியவைகள் எல்லாமுமே ஒன்றுசேர்ந்து அந்த பூதத்தை விரட்டி ஓட்டப்பார்க்கின்றன.

போப்பைப்போன்ற மத அதிகாரிகளும் ஜாரைப்போன்ற அரசர்களும் பிரபல இராஜதந்திரிகளும், அரசியல்கட்சித் தலைவர்களும், இரகசிய வேவுகாரர்களும் ஆகிய எல்லோருமே ஒன்றுசேர்ந்து இந்தப் பூதத்தை ஒழிக்க "பகீரத"ப் பாடுபடுகின்றார்கள். எந்த அரசியல்சபையிலும் கவர்ன்மெண்டார் தங்கள் எதிரிகளை சமதர்மவாதிகள் என்று வைவதும், எதிர் கட்சியார்கள் தங்கள் கட்சியில் இருக்கும் தீவிரவாதிகளையும், பிற்போக்காளர்களையும் சமதர்மவாதிகள் என்று வைவதும், அந்தப்பேச்சையே சொல்லி எந்த எதிரியையும் வைது வாயடக்கப் பார்ப்பதும் சாதாரண வாடிக்கையாகி விட்டது.

இவைகளில் இருந்து இரண்டு விஷயங்கள் வெளியாகின்றன. அதென்னவென்றால்,

ஒன்று:— சமதர்மம் என்பதானது ஒரு பெரிய வலிமையும் ஆதிக்கமும் கொண்டதான ஒரு பெரிய சக்தி என்பதாக சகலரும் ஒப்புக்கொண்டு வெளிப்படையாகவே பயப்படுகின்றார்கள் என்பது.

இரண்டு:— உலகத்தில் உள்ள எல்லா சமதர்மவாதிகளும் ஒன்றாக சேர்ந்து தங்களுடைய உண்மை எண்ணங்களையும் பொதுவான லக்ஷியங்களையும் வேலைத்திட்டங்களையும் உலகத்தாருக்குமுன்னால் நன்றாய்விளங்கும்படி வெளிப்படையாய் ஒரு அறிக்கைமூலம் வெளியிட்டு அதில் உள்ள பயத்தையும் தப்பபிப்பிராயத்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம் என்பதாகும்.

ஆதலால் நாங்கள் (சமதர்மவாதிகள்) ஒன்றுசேர்ந்து லண்டன் நகரில் கூடி செய்துகொண்ட தீர்மானப்படி அடியில் கண்ட அறிக்கையை இங்கிலீஷ், பிரஞ்சு, ஜர்மன், இட்டாலியன், பிளமிஷ், டேனிஷ் ஆகிய பாஷைகளில் வெளியிடுகின்றோம்.

அத்தியாயம் 1.

முதலாளி-வேலையாளர் தத்துவம்

தற்காலம் இருந்துவரும் வகுப்புச் சச்சரவுகளானது சமூக அமைப்புகளையே அடிப்படையாகக்கொண்டதாக இருந்துவருகின்றன. ஆதியில் எஜமானன் அடிமை சச்சரவும், மேல்மக்கள் கீழ்மக்கள் சச்சரவும், மேஸ்திரிகைகள் சச்சரவும், பிறரை ஒடுக்கினவர்கள் பிறரால் ஒடுக்கப்பட்டவர்கள் சச்சரவும், ஆகிய ஒன்றுக்கொன்று வைரியான இரண்டுவித பிரிவுகள் சதா சச்சரவுகளை உண்டாக்கிக்கொண்டே வந்து இருக்கின்றன. இந்த சச்சரவுகள் சிலசமயங்களில மறைமுகமாகவும் சில சமயங்களில வெளிப்படையாகவும் நடைபெற்றுவந்து அவற்றின் பயனாகவே சில சமயம் சீர்திருத்தம் ஏற்படுவதும் சில சமயம் இரு கூட்டத்தாருக்கும் ஆபத்துகள் ஏற்படுவதும் சகஜமாகயிருந்துவந்திருக்கின்றன.

பூர்வகால சரித்திரத்தில் மனித சமூகத்தில் ஏணிப்படிகள் போல் படிப்படியாக பிரிவுகள் அமைக்கப்பட்டு அதுபோலவே படிப்படியான உரிமைகளும் அவைகளுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

ரோம் ராஜ்யத்தில் மேன் மக்கள் கீழ் மக்கள் என்றும், மத்திய காலத்தில் ஜமீன்தாரர்கள்,-பண்ணையாட்கள் என்றும், மேஸ்திரிகள் — கையாள்கள் என்றும், பல பிரிவுகளாகவும் இவ்வொவ்வொரு பிரிவுகளுக்குளும் அநேக உட்பிரிவுகளும் பிரிக்கப்பட்டிருந்தன.

தற்காலத்தில ஏற்பட்டிருக்கும் முதலாளி வகுப்பானது பழைய ஜமீன்தாரர்கள வகுப்புகளின் வீழ்ச்சியினாலேயே ஏற்பட்டதாகும். அதிலிருந்தே முளைத்ததாகும்.

தற்காலத்திலும் வகுப்புச் சச்சரவுகள் மேலும் மேலும் இனியும பெருகிக்கொண்டே போகின்றன. தற்காலத்திலும் கூட ஒரு வகுப்பார் மற்ற வகுப்பார்களை அடக்கியாள முயற்சிப்பதன் மூலமே சச்சரவுகள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றன.

எனினும் தற்காலத்திய முதலாளிவகுப்பு தோன்றிய பிறகுதான் வகுப்பு ஆதிக்கத்தில் இருந்துவந்த சூட்சிகள் எல்லாம் பட்டவர்த்தனமாய் வெளியாய் விட்டன. இப்பொழுது சமூகம் முழுவதையும் இரண்டே இரண்டு பிரிவுகளாகத்தான் பிரிக்கப்படுகின்றது. ஆனால் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாக இருந்துகொண்டு சதா போராடிக்கொண்டேயிருக்கவேண்டியதாகின்றது. இந்தப்படி போராடிக்கொண்டிருக்கும் இரண்டு பிரிவுகளுக்கும் தான் ஒன்றுக்கு முதலாளி வகுப்பு என்றும் மற்றதற்கு வேலையாள் வகுப்பு என்றும் பெயர். இந்த இரண்டு பிரிவுகளும் எப்படி ஏற்பட்டது என்கின்ற காரணங்களை ஆராய்ந்து பார்ப்பது அவசியமானதாகும்.

சரித்திரத்தின் மத்திய காலத்தில் கிராமாந்தரங்களில் ஜமீன்தாரர்களுக்கு அடங்கி வேலை செய்து வந்த குடியானவர்கள் சிலர் அச்சமீன்தாரர்களோடு பிணங்கிக்கொண்டு அவர்களுக்குப்பயந்து பட்டணங்களுக்கு வந்து குடியேறி வசிக்க ஆரம்பித்தார்கள். பிறகு இந்தப்படி பட்டணங்களில் வசித்து வந்த குடியான ஆட்களே சில தொழில்களில் ஈடுபட்டு பொருள் தேட ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் புதிதாக அமெரிக்காகண்டம் கண்டுபிடிக்கப்பட்டதாலும், கேப்முனையைத்தாண்டி இந்தியாவுக்குப்பாதை கண்டுபிடிக்கப்பட்டதாலும் வியாபாரம் பெருக ஆரம்பித்தது.

[தொடரும்.]

ஸில்க் அங்கவஸ்திரம்.

தூய்யவெள்ளை உடல்திக்கான பட்டு தினசரி துவைத்து உபயோகிக்கலாம். சலவையும செய்யலாம். ஒரு க்ஷணத்தில் உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டஞ்சகரையுள்ளது

	1க்கு	ரூ அ.
2½ வீதி 5 முளம்பட்டு	,,	1-10.
ஷை டசன்	,,	17-0.
2¼ 5 முளம் பட்டு	,,	1-6.
ஷை டசன்	,,	15-0.
3 வீதி 8 முளம்வேஷ்டி	,,	3-8.
ஷை டசன்	,,	40-0.

மானேஜர் S. K. R. வீவிங்
பாக்டரி, கோட்டார்,
திருவிதாங்கூர், தென் இந்தியா.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
வேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
*குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்		0—8—0
* மாதர் சுதந்திரம்.	...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம்		0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முரிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத் தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிரந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினலோ, அகால போஜனத்தினலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினலோ, தளர்ச்செய்துக் கொண்டதினலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊரூவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்துகட்டு என்பதற்கும் தடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக்கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,
(கால்ராபைரி)
கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0
விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—
திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 10. (பத்து)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்,
Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd
India Novel depot
73, Serangoon Road
கோலாலம்பூர்.
The Selanger Stamp Co.,
Market Street
S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang
Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S
The Central stores
31, Jalan Ibrahim,
Johore Bharu.
C. Kandiah,
85, Sultan street, Klang.
S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சொ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு " 5—0—0
ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு " 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6.9.31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை வினியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவபிரகாசம்,
"சன்மார்க்கன்" பழனி.

கெந்தக பஸ்பம்.

மேககுஷ்ட ரோகத்திற்கு 52 வருடங்களாக கையாண்டுவந்தது, ஏராளமான சாட்டிபிக்கேட்டும், தங்கமெடல்களும் பெற்றது.

இந்த கெந்தக பஸ்பம் மஹான் ராமலிங்க சுவாமியால் உபதேசிக்கப்பட்டது. மேக குஷ்டரோகம், 48 நாளில் சொஸ்தமாகிவிடும். அவுஷதம் மழைகாலத்திலும், வெய்யிற்காலத்திலும் சாப்பிடலாம, அவுஷதம் சாப்பிடும் காலத்தில் எத்தொழிலும் செய்யலாம். இந்த அவுஷதத்தால் குஷ்டரோகம் தீராவிட்டால் பிறகு கடவுள் தான் தீர்க்கவேணும். இந்த அவுஷதத்தால் வியாதி தீராதென்கிற சந்தேகப்பட்டவர்கள் எக்ரிமெண்டு செய்து கொண்டால் அவுஷதம் இனாமாய் அனுப்பப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விபரம் எழுதி தெரிந்துகொள்ளவும்.

48 நாள் சாப்பிடக்கூடிய அனுபான லேகியம், பஸ்பம், தைலம். விலை ரூபா. 20—0—0

அவுஷதத்திற்கு ஆர்டர் செய்பவர் ரோகத்தின் விபரம் கண்டு எழுதவும். ஏழை ஜனங்கள் நேரில் வந்தால் அவுஷதம் இனாம்.

விலாசம்:—

ஆயுர்வேத வைத்திய பாஸ்கர
V. கலிவாரயன்,
நிர்த்தன மங்கலம் போஸ்டு,
(வழி) சிக்கல், தஞ்சாவூர் ஜில்லா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுத்து நாகம்மாளால் வெளியிடப்பட்டது